விலை ரூபா: 3-50

# ஈழநாதம்

THE EELANAATHAM

நாதம் 01 | சுக்கில ஹூ மாசி மீ 22-ம் உ செவ்வாய்க்கிழமை | (06 - 03 - 1990) | ஹிஜ்ரி 1410 | ஷஃபா 08 | ஓசை 16

## "சுங்கப் பரிசோதனை முடிந்தே ரஞ்சன் ஈழம் வரமுடியும்"

- பெருமாள்

(திருகோணமலை)

பாதுசாப்பு வெளியுறவு அமைச்சர் ரஞ்சன் விஜெயரெட்னா ஈழம் எல்லையைத் தாண்ட வேண்டுமானால் சுங்கப் பரிசோதனையை முடித்துக் கொண்டுதான் வரவேண்டும் என்று முன்னாள் வடக்கு - கிழக்கு மாகாண சபை முதலமைச்சரும், தற்போதைய தேசிய சபைத் தலைவருமான வரதராஜப் பெருமாள் நேற்று முன்தினம் கூறியுள்ளார்.

வழமையான சுங்க ஒழுங்கு விதிகளை வரதர் மீறியதாக, அவர்மீது சுங்க அதிகாரிகள் விசாரணை மேற்கொண்டது தொடர்பாகக் கேட்ட கேள்வி ஒன்றுக்கே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

நாட்டில் அமுலில் இருந்த சுங்க விதிகளை மீறியதற்காகவே வரதர் மீது சுங்க விசாரணையை அரசாங்கம் முடுக்கிவிட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

வடக்கு-கிழக்கு மாகாணசபை ஆளுநர் நளின் செனிவரெட்னா சுதந்திரப் பிரகடனத்துக்குப் பிறகு தன்னைச் சந்தித்த சமயம், ஈழத்தின் அதிகார எல்

(6ஆம் பக்கம் பார்க்க)

⊛ எங்கள் அரசியல் கணிப்புத் தவறிவிட்டது

⊛ சரியாகப் புரிந்து கொள்ளவில்லை

⊛ எமக்குப் பாதகமாக அமைந்துவிட்டது

# புலிகளின் மோதலை நாம் தவறாகக் கணித்து விட்டோம்

## ஈரோஸ் பாலகுமார் பேட்டி

### "ஈழப் பிரகடனம் போலியானது; நாம் ஆயுதம் பெற்றது விவாதத்துக்குரியது"

(யாழ்ப்பாணம்)

"எங்கள் அரசியற் கணிப்புத் தவறிவிட்டது. இதனால் எங்களுக்கு பாதுகாப்பு இன்மை ஏற்பட்டது. கட்சியாக மாறியமை, பாராளுமன்றத் தேர்தலில் நின்றமை, இலங்கையிடமும், இந்தியாவிடமும் ஆயுதம் பெற்றமை போன்ற எமது நடவடிக்கைகள் விவாதத்திற்குரியதாக மாறிவிட்டது. விடுதலைப் புலிகளுக்கும் இந்தியாவிற்கும் இடையில் ஏற்பட்ட மோதலை தவறாகக் கணிப்பீடு செய்ததால் அது எமக்குப் பாதகமாக அமைந்தது." நேற்று மாலை எமது நிருபருக்கு அளித்த பேட்டி ஒன்றில் ஈழவர் ஜனநாயக முன்னணியின் (ஈரோஸ்) செயலாளர் நாயகம் வே. பாலகுமார் தெரிவித்தார்.

## தமிழ்க் காங்கிரசுடனும் ஹமீத் சந்தித்துப் பேசினார்

(கொழும்பு)

வடக்குகிழககுச் சமாதானக் குழுவின் தலைவரும் உயர் கல்வி அமைச்சருமான ஏ. ஸி. எஸ். ஹமீத் நேற்று முன்தினம் அகில இலங்கைத்தமிழ் காங்கிரஸ் தூதுக்குழுவைச் சந்தித்துப் பேசினார். காங்கிரஸ் தூதுக்குழுவின் தலைவர் குமார் பொன்னம்பலமும் திரு. மோதிலால் நேருவும் இடம் பெற்றிருந்தனர்.

இச் சந்திப்பின்போது வடக்குக் கிழக்கில் நடைபெறவேண்டுமென்ற சர்வஜனவாக்கெடுப்பு, ஆறாவது திருத்தச் சட்டம், திட்டமிட்ட குடியேற்றம், வடக்குக் கிழக்கின் எதிர்கால அரசியல் நிலைமைபற்றியும் பேசப்பட்டதாகத் தெரிகிறது.

அமைச்சர் ஹமீத் சமீபத்

## மன்சூர் பதவி நீக்கம்?

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்குமாகாண கல்வி அமைச்சின் செயலாளராக இருந்து வந்த மன்சூர், அப் பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார் என்று அறியப்படுகிறது.

தற்போது மேற்படி பதவிக்கு செல்வி சிரோன்மணி ராஜரட்ணம் நிய

## யாழ். குடாநாட்டில் வீதிகள் புனரமைப்பு

### அதிகாரிகள் பார்வையிட வருவர்

(யாழ்ப்பாணம்)

குடாநாட்டில் உள்ள பெருநகரங்களை இணைக்கும் வீதிகள் அனைத்தும் விரைவில் திருத்தப்பட உள்ளதாகவும் அதற்கு ஏற்றவகையில் இவ்விடையம் பற்றி பார்வையிடுவதற்கும் சேதங்களை மதிப்பிடுவதற்கும் தெற்கிலிருந்து அதிகாரிகள் வருவதாகவும்பெருந்தெருக்கள் திணைக்களஅதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

வீதி அபிவிருத்தி அதிகார சபைத்தலைவர் எம். பி. எஸ் பர்னான்டோவும் புனருத்தாரன வீதி வேலைகள் இணைப்பதிகாரி பி. ஆர். எக்ஸ்லையும் யாழ்குடாநாட்டில் உள்ள பெருவீதிகள் அனைத்தையும் பார்வையிடுவார்

(6ஆம் பக்கம் பார்க்க)

## சுற்றுநிருபம் தனிச் சிங்களத்தில்

(யாழ்ப்பாணம்)

யாழ். கல்வித் திணைக்களத்திற்கு கொழும்பு கல்வி அமைச்சிலிருந்து பணிப்புரைகளும் சுற்றுநிருபங் ளும் தற்பொழுதும் தனிச் சிங்களத்தில் அனுப்பி வைக்கப்படுவதாகத் தெரியவருகிறது. அதேவேளை இலங்கையில் தமிழ் மொழி அரசகரும மொழி அந்தஸ்தை பெற்றுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

## எதிரிகளைச் சமாளிக்க பாரதம் தயார் வி. பி. சிங்

(புதுடில்லி)

எதிர்நாடுகளின் ஆக்கிரமிப்பு, அச்சுறுத்தல் எதனையும் சமாளித்து முறியடிக்க பாரதம் தயாராகவுள்ளது என்று பாரதப் பிரதமர் வி. பி. சிங் நேற்று அறிவித்துள்ளார். மத்திய ரிஷேவ் பொலீஸாரின் பொன்விழாக் கொண்டாட்டம் நேற்று புதுடில்லியில் நடைபெற்றபோது அதில் கலந்து கொண்டு குடியரசுப் பொலிஸ் பதக்கங்களை மத்திய பொலிஸ்ப் பிரிவுப்படையில் சிறப்பாகப் பணி புரிந்தவர்களுக்கு வழங்கியபின் பிரதமர் வி. பி. சிங் செய்தியாளர்களிடம் பேசினார். (6ஆம் பக்கம் பார்க்க)

சபைத்தலைவர் எம். பி. எஸ் பர்னான்டோவும் புனருத்தாரன வீதி வேலைகள் இணைப்பதிகாரி பி. ஆர். எக் தெரியவருகிறது. அதேவேளை இலங்கையில் தமிழ் மொழி அரசகரும மொழி அந்தஸ்தை பெற்றுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

# தமிழ்க் காங்கிரசுடனும் ஹமீத் சந்தித்துப் பேசினார்

(கொழும்பு)

வடக்குகிழகைகுச் சமாதானக் குழுவின் தலைவரும் உயர் கல்வி அமைச்சருமான ஏ. ஸி. எஸ். ஹமீத் நேற்று முன்தினம் அகில இலங்கைத்தமிழ் காங்கிரஸ் தூதுக்குழுவைச் சந்தித்துப் பேசினார். காங்கிரஸ் தூதுக்குழுவின் தலைவர் குமார் பொன்னம்பலமும் திரு. மோதிலால் நேருவும் இடம் பெற்றிருந்தனர்.

இச் சந்திப்பின்போது வடக்குக் கிழக்கில் நடைபெறவேண்டுமென்ற சர்வஜனவாக்கெடுப்பு, ஆறாவது திருத்தச் சட்டம், திட்டமிட்ட குடியேற்றம், வடக்குக் கிழக்கின் எதிர்கால அரசியல் நிலைமைபற்றியும் பேசப்பட்டதாகத் தெரிகிறது.

அமைச்சர் ஹமீத் சமீபத்தில் மட்டக்களப்புக்கு சென்று தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் திரு. கோபாலசாமி மகேந்திர ராஜா (மாத்தயா)வைச் சந்தித்துப் பேசயிருந்ததும் இப்

(6ஆம் பக்கம் பார்க்க)

## மன்சூர் பதவி நீக்கம்?

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்குமாகாண கல்வி அமைச்சின் செயலாளராக இருந்து வந்த மன்சூர், அப் பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார் என்று அறியப்படுகிறது.

தற்போது மேற்படி பதவிக்கு செல்வி சிரோன் மணி ராஜரட்ணம் நியமிக்கப்பட்டுள்ளார் என்றும், மன்சூர் வேறொரு அமைச்சின செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார் என்றும் கூறப்படுகிறது. (தி)

# ஈரோஸ் பாலகுமார் பேட்டி

## "ஈழப் பிரகடனம் போலியானது; நாம் ஆயுதம் பெற்றது விவாதத்துக்குரியது"

(யாழ்ப்பாணம்)

"எங்கள் அரசியற் கணிப்புத் தவறிவிட்டது. இதனால் எங்களுக்கு பாதுகாப்பு இன்மை ஏற்பட்டது. கட்சியாக மாறியமை, பாராளுமன்றத் தேர்தலில் நின்றமை, இலங்கையிடமும், இந்தியாவிடமும் ஆயுதம் பெற்றமை போன்ற எமது நடவடிக்கைகள் விவாதத்திற்குரியதாக மாறிவிட்டது. விடுதலைப் புலிகளுக்கும் இந்தியாவிற்கும் இடையில் ஏற்பட்ட மோதலை தவறாகக் கணிப்பீடு செய்ததால் அது எமக்குப் பாதகமாக அமைந்தது." நேற்று மாலை எமது நிருபருக்கு அளித்த பேட்டி ஒன்றில் ஈழவர் ஜனநாயக முன்னணியின் (ஈரோஸ்) செயலாளர் நாயகம் வே. பால்குமார் தெரிவித்தார்.

மேலும் அவர் குறிப்பிடுகையில் வடக்கு - கிழக்கு மாகாணசபை கலைக்கப்பட வேண்டும் என்றும், வரதராஜப் பெருமாளின் தனிநாட்டுப் பிரகடனம் ஓர் அரசியல் இலாபம் தேடும் நடவடிக்கை எனவும் தெரிவித்தார்.

## இலங்கை இந்திய ஒப்பந்தம் செயற்கையானது

அவர் தனது பேட்டியில் மேலும் தெரிவித்ததாவது எங்களைப் பொறுத்து ஓர் புதிய கால கட்டம் ஆரம்பிக்ககின்றதென்றார். இலங்கைஇந்திய ஒப்பந்தம் செயற்கைகளாக உருவாக்கப்பட்டது. இவ் ஒப்பந்தத்தை ஓர் இடைக்காலத் தீர்வாகவும், எங்கள் அரசினர் நடவடிக்கைகளுக்குப் பாதுகாப்பாகவும் அதை ஏற்றுக் கொண்டோம் என்றும் தெரிவித்தார். இலங்கை இனப் பிரச்சினையைதீர்ப்பதற்கு இந்தியாவிற்கு ஓர் சந்தர்ப்பம் கொடுத்தோம். முதலில் இந்திய இராணுவத்தை ஓர்அன்னிய நாட்டு இராணுவமாக நாங்கள் கருதவில்லை என்றும் குறிப்பிட்டார்.

## விடுதலைப் புலிகளைச் சரியாகப் புரியமுடியவில்லை

மேலும் அவர் குறிப்பிடுகையில் விடுதலைப் புலிகளின் இயக்க நடவடிக்கைகளை எங்களால் சரியாகப் புரிந்து கொள்ளமுடியவில்லை இதனால் எங்களது அரசியற் கணிப்பு தவறி விட்டது என்றும் குறிப்பிட்டார். ஆயுத ஒப்படைப்பால் எங்களுக்கு பாதுகாப்பு இன்மை ஏற்பட்டது எனவும் தெரிவித்தார்.

(6ஆம் பக்கம் பார்க்க )

# எதிரிகளைச் சமாளிக்க பாரதம் தயார் வி. பி. சிங்

(புதுடில்லி)

எதிர்நாடுகளின் ஆக்கிரமிப்பு, அச்சுறுத்தல் எதனையும் சமாளித்து முறியடிக்க பாரதம் தயாராகவுள்ளது என்று பாரதப் பிரதமர் வி. பி. சிங் நேற்று அறிவித்துள்ளார். மத்திய ரிஷேவ் பொலீஸாரின் பொன்விழாக் கொண்டாட்டம் நேற்று புதுடில்லியில் நடைபெற்றபோது அதில் கலந்து கொண்டு குடியரசுப் பொலிஸ் பதக்கங்களை மத்திய பொலிஸ்ப் பிரிவுப்படையில் சிறப்பாகப் பணி புரிந்தவர்களுக்கு வழங்கியபின் பிரதமர் வி. பி. சிங் செய்தியாளர்களிடம் பேசினார்.

(6ஆம் பக்கம் பார்க்க)

# ஆறு லட்சம் செலவில் கவின்கலைக் கல்லூரி

### கிளிநொச்சியில் சனிக்கிழமை திறப்புவிழா

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சியில் கட்டிமுடிக்கப்பட்டுள்ள கவின்கலைக் கல்லூரியின் திறப்புவிழா எதிர்வரும் பத்தாம் திகதி சனிக்கிழமைமாலை 4-மணியளவில் விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணித் தலைவர் திரு. கோபாலசாமிமகேந்திரராஜா (மாத்தையா) அவர்களினால் திறந்து வைக்கப்பட உள்ளது.

(6ஆம் பக்கம் பார்க்க)

## ஆமர் வீதியில் வெடிமருந்து

(கொழும்பு)

மாத்தறை மாவட்டத்தில் தெலிஜவெல என்ற கிராமத்தில் கடமையில் ஈடுபட்டிருந்த

(6ஆம் பக்கம் பார்க்க)

# இனியும் காலதாமதம் செய்யலாகுமோ?

(யாழ்ப்பாணம்)

யாழ். செயலகத்தில் ஊழியர்களின் வருகை குறைவடைந்திருப்பதாகப் புகார் தெரிவிக்கப் பட்டுள்ளது.

சில ஊழியர்கள் காலை பத்து மணிக்குப் பின்பே வேலைக்கு வருகிறார்கள்என்றும் கடந்த காலத்தில் இராணுவ நடவடிக்கையினால் தாமதமாகிறது அல்லது வருகை தர முடியவில்லை என்று காரணம் சொல்லப்பட்டது நியாயமாக இருக்கலாம். ஆனால் இன்றைய காலத்தில் எவற்றையும் காரணம் சொல்ல முடியாது என்று யாழ். செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மேற்படி வருகை குறைவாலும், தாமதமாக ஊழியர்கள் வருவதாலும் மக்களுக்கு போதியளவு சேவை செய்ய முடியாமல் இருப்பதாகவும் அவ் அதிகாரி கவலை தெரிவித்தார்.

இது சம்பந்தமாக உயர் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார். (தி)

# ஆசிரியர் மாற்றம் உடன் நிறுத்துக

(கொழும்பு)

நாடுபூராகவுமுள்ள ஆசிரியர் பற்றிய புள்ளிவிபர மதிப்பீடு ஒன்றை மேற்கொள்ளும் வரை சகல ஆசிரியர் மாற்றங்களும் உடன் நிறுத்திவைக்கப்பட்டுள்ளதாக கல்விச் சேவை ஆணைக்குழு அறிவித்துள்ளது.

1989 ஜூலை முதல் 15,000 ஆசிரியர் மாற்றங்கள் இடம் பெற்றுள்ளன என்றும், இந்த மாற்றங்களில் ஒழுங்கீனங்கள் இருப்பதாகத் தமக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும் கல்விச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் ஜோர்ஜ் மெண்டிஸ் தெரிவித்துள்ளார்.

ஆசிரியர் பற்றாக்குறை தொடர்பான மதிப்பீடு ஒன்றை மேற்கொண்டு அறிக்கையை கல்விச்சேவை ஆணைக்குழுவுக்கு அனுப்பிவைக்கும்படி சகல மாகாண, பிரதேச கல்விப் பணிப்பாளர்களையும் கல்விச்சேவை ஆணைக்குழு கேட்டுள்ளது.

# வேலணை வங்கிக்கிளை மீண்டும் வேண்டும்

(தீவுப்பகுதி)

தீவுப்பகுதியின்கேந்திரஸ்தானமாகிய வேலணையில் இயங்கி வந்த இலங்கைவங்கிக் கிளையை மீண்டும் வேலணையில் திறக்கும்படி இவ்வங்கியின் வாடிக்கையாளர்களும் பொதுஸ்தாபனங்களும் வேண்டுகோள் விடுக்கிறார்கள்.

வேலணையில் இருந்த இந்த வங்கிகொள்ளையடிக்கப்பட்ட காரணத்தினாலும் பாதுகாப்பின்மையாலும் கடந்த சில வருடங்களுக்கு முன்பு மூடப்பட்டு, யாழ்ப்பாணம் இலங்கை வங்கி இரண்டாவது கிளையுடன் இது இணைக்கப்பட்டிருந்தது. பின்பு இவ்விணைப்பை நீக்கி வேலணைவங்கி வாடிக்கையாளர்களை யாழ்ப்பாணம் இரண்டாவது கிளையுடன் வங்கி நிர்வாகம் சேர்த்துக் கொண்டது குறிப்பிடத்தக்கது. தற்போது நிலைமை சீரடைந்துள்ள காரணத்தினால் இவ்வங்கிக் கிளையை மீண்டும திறந்து சேவையாற்றுவது தீவுப்பகுதி மக்களுக்கு நன்மைபயக்கக் கூடிய ஒன்றாகும். (15)

# பிரேமா - மாத்தயா

# $2\frac{1}{2}$ மணி நேரம் பேசினர்!

( கொழும்பு )

இலங்கை ஜனாதிபதி ஆர் பிரேமதாசாவும் தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித்தலைவர் திரு கோபால்சாமி மகேந்திரராஜா (மாத்தயா) வும் இரண்டாவது தடவையாக மீண்டும் கொழும்பில் சந்தித்துப் பேசினார். இப் பேச்சு வார்த்தை நேற்று இரவு எட்டு மணிக்கு ஆரம்பித்து சுமார் பத்தரை மணி வரை நீடித்தது.



ஜனாதிபதி பிரேமதாசா தரப்பில்உயர்கல்வி விஞ்ஞான அமைச்சரும் வடக்கு - கிழக்கு மாகாண ஒற்றுமைக்குழுத் தலைவருமான ஜனாப் ஏ.ஸி. எஸ். ஹமீத், ஜெனரல்சேபால அட்டிகல, ஜெனரல் சிறில் ரணதுங்க ஆகியோர் கலந்து கொண்டனர். விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் திரு. கே. மகேந்திரராஜா (மாத்தயா) வுடன் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம், திருமதி பாலசிங்கம், மக்கள் முன்னணிச் செயலாளர் திரு. யோகரத்தினம் (யோகி) திரு. சுரேஸ் (மட்டக்களப்பு) ஆகியோரும் கலந்து கொண்டனர்.

சென்ற மாதம் விடுதலைப்

(6 ஆம் பக்கம் பார்க்க)



## இன்றைய சினிமா

74 வது நாளாக!!
**நியூ சாந்தி (யாழ்)**
தினசரி 10.30, 2.30, 6.30
சூப்பர் ஸ்ரார்'
ரஜனி - அமலா நடித்த
**கொடி பறக்குது**
(கலர்)

7 வது வாரம்
**மனோகரா - (யாழ்)**
தினசரி 10.30, 2.30, 6.30
ரஜனி, ரூபினி. நடித்த
**மனிதன்**
(கலர்)

ஜனத்திரள் காட்சிகள்
**ஹரன் யாழ்.**
10-30 2-30 6-30
கமலஹாசன்
சரண்யா நடித்த
**நாயகன்**
(கலர்)

**லிடோ (யாழ்)**
10. 30, 2. 30, 6. 30
★ பிரபு ★ சரிதா
**பூ- பூவா பூத்திருக்கு**
(கலர்)

**ராஜா (யாழ்)**
10. 30, 2. 30, 6. 30
ரஜனி (இரு வேடம்)
ராதா, நதியா
**ராஜாதி ராஜா**
(கலர்)

12ஆவது வாரம்
**வெலிங்டன் (யாழ்)**
தினசரி
10. 30, 2. 30 6. 30
★ கார்த்திக் ★ குஷ்பு
**வருஷம் 16**
(கலர்)

**ஸ்ரீதர் (யாழ்)**
10. 30, 2. 30, 6. 30
கமலஹாசன் -- சுஜாதா
**அவள் ஒரு தொடர்கதை**

## இந்தியப் படை இருந்த பகுதியில் ஆலயம் சேதம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை கொட்டடி விநாயகர் ஆலய புனருத்தாரண வேலைகள் வெகுவிரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன. இந்திய இராணுவத்தினர் பருத்தித்துறையிலிருந்து வெளியேறியதையடுத்து இவ் ஆலய தேவஸ்தான பரிபாலனசபை ஆலய நடவடிக்கைகள் கருதி அவசர பொதுக் கூட்டமொன்றை நடாத்தியது. இக் கூட்டத்தில் ஆலய புனருத்தாரண சபையொன்று அமைக்கப்பட்டுள்ளது.

இவ் ஆலயப்பகுதி இலங்கை இந்திய இராணுவத்தினரின் முகாமிற்குள் இருந்துவந்தது. இதனால் எவரும் இவ் ஆலயத்திற்குச் செல்ல முடியாத நிலை இருந்தது. அண்மையில் இந்திய இராணுவத்தினர் பருத்தித்துறையைவிட்டு வெளியேறிய பின்னரே ஆலயத்திற்குச் செல்லக்கூடியதாக இருந்தது.

ஆலய மண்டபங்கள், கூரைகள் தூபிகள் முற்றாகச் சேதமடைந்துள்ளன. சித்திர வேலைப்பாடுகளுடனான தேர், கிருஷ்ணர், ராதாருக்மணி விக்கிரகங்கள் உட்பட பல சிலைகளும் காணப்படவில்லை. தேர் எரிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது. விலைமதிப்பு மிக்க பஞ்சலோக எழுந்தருளி மூர்த்தி தூபி இடிபாடுகளுக்கிடையில் கிடந்தது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு இன்னல்கள் நிறைந்திருந்தவேளையிலும் ''எழுந்தருளி மூர்த்தி'' எவரின் கண்களுக்கும் அகப்படாமல் இருந்து தற்போது வெளிப்பட்டிருக்கிறது. (25)

## புனருத்தாரணக் குழு

(பருத்தித்துறை)

பருத்தித்துறை கொட்டடி சித்திவிநாயகர் தேவஸ்தான புனருத்தாரண சபை உறுப்பினர்களாகப் பின்வருவோர் தெரியாகியிள்ளனர்.

தலைவர் கு. நவரத்தினசாமி உப-தலைவர்கள். இரா .அருளானந்தம். பா. கனேசலிங்கம் செயலார். ஆ. ப. பசுபதி உப-செயலாலார். இரத்தினவேலாயுதம் பொருளாளர். அ. நாகரத்தினம்(குகன்)உப-பொருளாளர் செ. இரத்தினவேல் செயற் குழுஉறுப்பினர்கள் க.நாகேந்திரன் த.தியாகராஜா ட.பாலகிருஸ்ணன். வ. கோபால பிள்ளை. தே. தேவராஜாநா. விஜரயத்தினம். தா. அருளானந்தம், கோ. நோசராசா (25)

## வடமராட்சியில் உடற்பயிற்சிப் போட்டி

மேற்படி போட்டி 9-3-90 வெள்ளிக்கிழமை காலை 8-30 மணிக்கு யாழ். மெதட்டிஸ்ற் பெண்கள் உயர்தர பாடசாலையில் உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. பொ. வீரபத்திரன் தலைமையில் நடைபெறும். கொத்தணி மட்டத்தில் 1ஆம் இடத்தைப் பெற்றுள்ள அணிகள் இப் போட்டியில் பங்குபற்றும். அதிபர்கள் போட்டிக்கு வரும்பொழுது மாணவர் பெயர். பிறந்த திகதி ஆகியன அடங்கிய பட்டியலுடன் வருமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர், பாடசாலைகளைப் பங்குபற்றவைப்பது கொத்தணி அதிபரின் தலையாய கடமையாகும்.

## புவியியல் கழக வெளியீடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பல்கலைக் கழக புவியியற் கழகத்தின் ஆண்டுச் சஞ்சிகையான யாழ்ப்பாணப் புவியியலாளன் வரும் புதன்கிழமை மாலை 3.00 மணிக்கு கைலாசபதி கலை அரங்கில் நடைபெறும். இவ் விழாவிற்கு கே. இராஜேந்திரன் தலைமை தாங்குவார். பேராசிரியர் அ. துரைராஜா ஆரம்ப உரையினை நிகழ்த்துவார். இச் சஞ்சிகையின் வெளியீட்டுரையை பேராசிரியர் என். பாலகிருஸ்ணன் நிகழ்த்துவார்.


ஈழநாதமே!

காலை சேவல் கூவியதும்
எமது கடை வாசலில்
நீ வாசிப்பதற்கு கிடைப்பாய்

மக்கள் கடைமுன்பு நின்று, அடிபட்டு, உனது செய்திகளை படிப்பார்கள்
வாழ்க நீ
வளர்க உன் செய்திகள்

**உயர்ரக மரத்தளபாடங்களுக்கும்**
**ஆர்பிக்கோ, சேஸ்ரா மெத்தைகளுக்கும்**
**நீங்கள் நாடவேண்டிய ஸ்தாபனம்**

**EXPO FURNISHERS (PVT) LTD**

441, K.K.S. Road, Jaffna.

(B 174)



**ஈழநாதமே!**

உனது சேவை தொடர
வாழ்த்தும்

**'விஷ்ணு விஹார்'**
(சைவ உணவகம்)
மின்சார நிலைய வீதி,
(பஸ்நிலையம் முன்பாக)
யாழ்ப்பாணம்.

B7.11



### வரிவிளம்பரம்

### விற்பனைக்கு

சீயாக்காய், பயறு, அரிசி, வெந்தயம் ஆகிய நான்கு இயற்கைப் பொருட்களடங்கிய 'சீயாக்காய்ப் பவுடர்'' எங்களிடம் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். M. G. M., No. 777, K. K. S. Road, JAFFNA. B 120

### போட்டோஸ்ரட்

தெளிவான போட்டோஸ்ரட் பிரதிகளை விரைவாக பெற்றுக்கொள்ள நாடுங்கள் 'கிளீன் கட்''

### தேவை

பிளேட்டின் மெஷின் மைன்டர், கொம்பசிட்டர் தேவை. நேரில் வரவும். வேலை பயில விரும்பும் இருபாலாரும் தேவை ஸ்ரீ வாணி அச்சகம் அச்சுவேலி.

### தேவை

அரிசி ஆலையில் வேலை செய்வதற்கு ஆட்கள் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும். உணவு தங்குமிட வசதி செய்து கொடுக்கபடும். K. S. R. K. மில்ஸ், G. P. S. லேன், கல்வியன்காடு.

(B- 119)


### கவின் கலைக் கல்லூரித் திறப்புவிழா

கிளிநொச்சி கலை கலாசாரப் பேரவையால் ஸ்தாபிக்கப்பட்ட கிளிநொச்சி கவின் கலைக் கல்லூரி வரும் சனிக்கிழமை 10ஆம் திகதி பிற்பகல் 4.30 மணிக்கு திறப்பு விழா நடத்தப்படும்


தற்கால நாகரீகத்திற்கேற்ற நைலக்ஸ், கொட்டன் சாறிகள், திருமண வைபவங்களுக்குத் தேவையான கூறைச் சேலைகள், சூட்டிங், சேட்டிங், றெடிமேட் சேட்ஸ், சோட்ஸ், சிறுவர் சிறுமியருக்கேற்ற றெடிமேட் ஆடை வகைகளை ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள யாழ் நகரில் சிறந்த ஸ்தாபனம்.

**ராஜ்கோபால்ஸ்**

வட இலங்கையில் பூகொடை பிடவைகளின்
மொத்த வியாபாரிகள்.

வருஷம் 16
(கலர்)

ஸ்ரீதர் (யாழ்)
10. 30, 2. 30, 6. 30
கமலஹாசன் -- சுஜாதா
அவள் ஒரு
தொடர்கதை


நீங்கள் நாடவேண்டிய ஸ்தாபனம்

EXPO FURNISHERS (PVT) LTD

441, K.K.S. Road, Jaffna.

(B 174)



(சைவ உணவகம்)
மின்சார நிலைய வீதி,
(பஸ்நிலையம் முன்பாக)
யாழ்ப்பாணம்.

B7.11


**கல்லூரித் திறப்புவிழா**

கிளிநொச்சி கலை கலாசாரப் பேரவையால் ஸ்தாபிக்கப்பட்ட கிளிநொச்சிகவின் கலைக் கல்லூரி வரும் சனிக்கிழமை 10 ஆம் திகதி பிற்பகல் 4 . 30 மணிக்கு திறப்பு விழா நடத்தப்படும்


தற்கால நாகரீகத்திற்கேற்ற நைலக்ஸ், கொட்டன் சாறிகள், திருமண வைபவங்களுக்குத் தேவையான கூறைச் சேலைகள், சூட்டிங், சேட்டிங், றெடிமேட் சேட்ஸ், சோட்ஸ், சிறுவர் சிறுமியருக்கேற்ற றெடிமேட் ஆடை வகைகளை ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள யாழ் நகரில் சிறந்த ஸ்தாபனம்.

# ராஜ்கோபால்ஸ்

வட இலங்கையில் பூகொடை பிடவைகளின் மொத்த வியாபாரிகள்.

47, பெரியகடை, யாழ்ப்பாணம்.

Specialist in **WEDDING SAREES** and all other
**REQUIREMENTS IN TEXTILES**

# RAJGOPALS

*North Ceylon PUGODA TEXTILES Wholesale Dealers*

**47, GRAND BAZAAR, JAFFNA.**

B.168



சுடச்சுடச் செய்தியுடனும்!! புதுப்பொலிவுடனும்!!

இன்று மக்கள் எல்லோரும் விரும்பிப் படிப்பது **ஈழநாதமே**

**நீ கூடிய சீக்கிரம் வாரமலர் ஒன்றாகவும் பக்கங்கள் அதிகரிப்புடனும் வர**
**அன்புசார்ந்த வாழ்த்துக்கள் உரித்தாகுக!**

**V. S. K. ஸ்ரோர்ஸ்**

வல்லை றோட், அச்சுவேலி.

திறம் புகையிலை வகைகளை மொத்தமாகவும், சில்லறையாகவும், பலசரக்குச் சாமான்களையும் ருசியாய் சமைப்பதுக்குகேற்ற மண் பானை சட்டிகளையும், மற்றும் பாடசாலைக்கு ஏற்ற கொப்பி வகைகளையும் பெறுவதற்கு ஒரு சிறந்த இடம்

T. V. வாடகைக்கு விடப்படும்.

# வி. எஸ். கே. ஸ்ரோர்

வல்லை றோட், அச்சுவேலி.


# ஹரியானா முதல்வர் போட்டியிட்ட தொகுதியில் மீண்டும் வாக்கெடுப்பு

## தேர்தலின்போது வன்முறைகள் அதிகரிப்பு

மறு தேர்தல் நடத்தும்படி மேகம்ப தொகுதியில் தேர்தல் கமிஷனை கேட்பது பற்றி இக் கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டது. இந்த முடிவுக்கு கூட்டத்தில் கலந்து கொண்ட உள்துறை துணைப் பிரதமர் தேவிலாலும் சம்மதம் தெரிவித்தார். கூட்டத்தில் எடுக்கப்பட்ட இந்த முடிவுக்கு தான் முழு ஆதரவு தருவதாகவும் அவர் கூறினார். கட்சியின் புகழையும் கௌரவத்தையும் பாதுகாக்க தான் எந்தவித தியாகத்தையும் செய்யத் தயாராக இருப்பதாக தேவிலால் கூறினார் இதை பிரதமர் வி. பி. சிங்கும் ஆதரித்தார்.

(புதுடில்லி)

துணைப் பிரதமர் தேவிலாலின் மகனும், ஹரியான முதல் அமைச்சருமான சௌ



பாலா மேகம்ப சட்டமன்ற தொகுதியில் நடைபெற்ற இடைத்தேர்தலில் போட்டியிட்டார் ஆங்கு வாக்குப் பதிவில் வன்முறை கலவரங்கள் ஏற்பட்டதால் வாக்கு எண்ணிக்கை நிறுத்தி வைக்கப்பட்டது. மேகம்ப தொகுதியில் மறு வாக்குப் பதிவு நடைபெற வேண்டும் என்று வி. பி. சிங் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. ஹரியானா முதல் மந்திரி சௌபாலா போட்டியிட்ட மேகம்ப தொகுதியில் மறு தேர்தல் நடைபெறும் என்று வி. பி. சிங் தலைமையில் நடந்த ஜனதா தள் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. இதற்கு துணைப் பிரதம மந்திரி தேவிலாலும் சம்மதம் தெரிவித்தார்.

### வாக்கு எண்ணிக்கை நிறுத்தம்

புதுவை உட்பட ஒன்பது மாநில சட்ட சபைகளுக்கு கடந்த பெப்ரவரி மாதம் 27ஆம் திகதி தேர்தல் நடைபெற்றது. அப்போது ஹரியான மாநிலம் மேகம்ப சட்டமன்ற தொகுதி இடைத் தேர்தல் நடைபெற்றது. இந்தத் தொகுதியில் ஹரியான முதல் மந்திரி சௌபாலா பிரதான வேட்பாளராக போட்டியிட்டார். இவர் துணைப் பிரதமமந்திரி தேவிலாவின் மகனாவார். இந்தத் தொகுதியின் வாக்குப் பதிவின்போது வாக்குச் சாவடிகளை கைப்பற்ற வன்முறை நடந்தது. பொலிஸ் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் நடந்தது. இந்தக் கலவரத்தில் பலர் உயிர்இழந்தனர். இதையடுத்து பல வாக்குச் சாவடிகளில் மறு வாக்குப் பதிவு நடைபெற்றது. அப்போதும் நடைபெற்ற கலவரங்களில் மேலும் பலர் பலியானார்கள்.



இதையடுத்து இந்தப் பகுதிகளில் வாக்குகள் எண்ணப்படவில்லை. வாக்குப்பதிவின்போது வாக்குச் சாவடியின் பெட்டிகள் கவிழ்ந்தது. தேர்தல் கமிஷனரும் பார்வையாளர்களும் சென்று நிலைமையை பார்வையிட்டு வாக்குகள் எண்ணப்படுவதை நிறுத்தினர். இதனையடுத்து முதன் மந்திரி சௌபால தொடர்ந்து வாக்குகளை எண்ணும் படி கோரியதை தேர்தல்களை நிராகரித்து விட்டது.

### ஜனதா தள் ஆலோசனை

மீண்டும் மேகம்ப தொகுதி வாக்குப் பதிவு இடம் பெற வேண்டும் என்பது பற்றிய கருத்து ஜனதா தள் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. வி. பி. சிங் தலைமையில் நடந்த இக் கூட்டத்திற்குப் பதில் பிரதம மந்திரி தேவிலால் உட்பட ஜனதா தள் உறுப்பினர் பலரும் கலந்து கொண்டனர்.

## “சில முஸ்லிம் பிரதேசங்களில் சுயாட்சி நிர்வாகம் நடத்தலாம்”

- கலாநிதி அன்ரன் பாலசிங்கம்

(மட்டக்களப்பு)

வட-கிழக்கு மாகாணத்தில் தனிமுஸ்லிம்மாகாண சபை என்ற கோரிக்கை நடைமுறை சாத்தியம் அல்ல, சில முஸ்லிம் பிரதேசங்களில் பிரதேச சுயாட்சி நிர்வாகம் அனுமதிக்கத் தயார்.

இத்தகவலை தமிழீழ விடுதலைப் புலிகள் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது.

வட-கிழக்கு மாகாணம் தமிழ்-முஸ்லிம்களின் தாயக பூமி என்பது சகலரினாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட வரலாற்று உண்மை இதனை சர்வஜன வாக்கெடுப்பு மூலம் உறுதிப்படுத்த தேவையில்லை.

ஸ்ரீ. ல. மு. காங்கிரஸ் மட்...

கோருகிறது. ஏனைய கட்சிகள், அமைப்புகள் எம்முடன் நடாத்திய சந்திப்புகளில் ஒன்றாக வாழ வேண்டும் என்ற நிலைப்பாடு கொண்டுள்ளார்கள்.

எந்த வடிவமென்றாலும் பிரிக்காதவகையில் உரிமைகள் பாதுகாக்கத்தக்கதாக பிரச்சினைக்கு தீர்வு காணப்படும் என விரும்புகிறார்கள்.

அதே நேரம் தமிழ் - முஸ்லிம் மக்கள் செறிந்து வாழ்கிறார்கள். ஒருவரை விட்டு ஒருவர் பிரிவதை நாம் விரும்பவில்லை. (37)

## மட்டக்களப்பில் அரச அதிபர் இல்லை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு கச்சேரிக்கு ...

## சிறுவர் நாடகம் 6வதுதடவையாக மேடைஏறியது

(பருத்தித்துறை)

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மாணவர்களின் சிறுவர் நாடகமான ‘‘ஆச்சிசுட்ட வடை’’ நாடகம் ஆறாவது தடவை மேடையேறியது’’

கல்லூரியின் 7 ஆம் ஆண்டு மாணவர்கள் 21 பேர் இந்த நாடகத்தில் பங்கு பற்றினர். நாடக நெறியாள்கையை ஆசிரியர். திரு. பா. இரகுவரன் மேற்கொண்டிருந்தார். சிவராத்திரி தினத்தன்று பருத்தித்துறை பசுபதீஸ்வரர் ஆலயம் புலோலிமேற்கு மாயக்கை சித்திவிநாயகராலயம் ஆகிய இரு ஆலயங்களிலும் இந்நாடகம் இடம் பெற்றது. (25)

## கட்சித்தலைவர் பதவியை வி. பி. சிங் துறந்தார்

(புதுடில்லி)

பிரதம மந்திரி வி. பி. சிங் ஜனதா தள் கட்சித் தலைவர் பதவியை ராஜினாமாச் செய்தார். பிரதமர் பதவியில் மட்டும் அவர் நீடிப்பார். ஒருவருக்கு ஒரு பதவி. பிரதமர் வி. பி. சிங் ஜனதா தள் கட்சித் தலைவராகவும் இருந்து வந்தவர் அல்லவா. பிரதமராகவும், ஜனதா தள் கட்சியின் தலைவராகவும் இருந்த வி. பி. சிங் ஒருவர் இரண்டு பதவிகளை வகிக்கக் கூடாது ஒருவருக்கு ஒரு பதவி என்ற கொள்கையின் அடிப்படையில் கட்சித் தலைவர் பதவியில் இருந்து விலக முடிவு செய்ததாகக் கூறினார். ஆனால் கட்சி மேலிடம் சட்ட சபைத் தேர்தல் முடியும் வரை தலைவர் பதவியை நீடிக்குமாறு வி. பி. சிங்கைக் கேட்டிருந்தனர். சட்ட சபைத் தேர்தல் முடிந்து நேற்று முன்தினம் ஜனதா தள் கமிட்டிக் கூட்டம் நடைபெற்றது. ஜனதா தள் கமிட்டிக் கூட்டத்திற்கு வி.பி. சிங் தலைமை வகித்தார்.

### ராஜினாமாக் கடிதம்

இந்தக் கூட்டத்தில் ஜனதா தள் கட்சியின் தலைவர் பதவியை ராஜினாமாச் செய்யும் கடிதத்தைப் பொதுச் செயலாளர் அஜித் சிங்கிடம் வி. பி. சிங் கொடுத்தார். மாற்று ஏற்பாடு செய்யும்வரை தலைவர் பதவியை வகிக்குமாறு மேலிடம் கேட்டுக்கொண்டது ஜனதா தள் கட்சியின் அறிவிப்பாளர் இத் தகவலைத் தெரிவித்தார்.

## புரட்சியாளர் வசமிருந்த ஹோட்டலை பிலிப்பைன் இராணுவம் மீட்டது தளபதி கொலையுண்டார்

பிலிப்பைன் வட பகுதியில் கடந்த ஞாயிறு புரட்சி ஆளுநர் ஒருவராலும், நூற்றுக் கணக்கான வீரர்களாலும் கைப்பற்றப்பட்டிருந்த ஹோட்டல் ஒன்று அரச துருப்புக்களால் மீட்கப்பட்டது.

புரட்சியாளர்களால் பணயக் கைதியாக வைக்கப்பட்டிருந்த அரச படைத் தளபதி ஒருவர் கொல்லப்பட்டார்.

ஜனாதிபதி கொறேசன் அக்கினோவிற்குச் சவாலாக, பதவி நீக்கம் செய்யப்பட்ட காகயன் மாகாண ஆளுநரான றொடொல்போ அகுவினல்டோ. ஆறு மாடிகள் கொண்ட அந்த ஹோட்டலைக் கைப்பற்றி, பிரிகேடியர் ஜெனரல் ஒஸ்கார் புளோரெண்டோவைப் பணயக் கைதியாக்கினார். புரட்சியாளர்கள் அவரைச் சுட்டுக் கொன்றதாக அறியப்படுகிறது.

## சூடான் லிபியா பொருளாதாரக் கூட்டு

(கார்டூம்)

சூடானும், லிபியாவும் தங்கள் இரு நாடுகளையும் இனி வரும் நான்கு ஆண்டுகளுக்கு ஒரே அரசியல் பொருளாதார சட்டமைப்புக்குள் கொண்டுவரலாம் என்பதை கொள்கை அளவில் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

லிபியாவில் மூன்று நாள் பயணம் மேற்கொண்டு கார்டூம் திரும்பிய சூடான் ராணுவத் தலைவர் ஜெனரல் ஓமர் ஹசன் எல். பஷீர் இதை தெரிவித்தார். அரசியல், கலாசார, பொருளாதார பாதுகாப்பு அம்சங்களும் இவ்விணைப்பினுள் இடம்பெறு என்று ஜெனரல் எவ். பஷீர் கூறினார். இரு நாட்டு சட்டப் பேரவைகளும் இந்த அறிவிப்பை அங்கீகரித்த பின் இணைப்புப் பணி தொடங்கும்.

நிக்ரக்குவா

## அமைதியான ஆட்சி மாற்றத்திற்கு சன்டினிஷ்டா இராணுவம் எதிர்ப்பு

(மானக்குவா)

நிக்கரக்குவாவில் ஆட்சியில் இருக்கும் இடதுசாரி சன்டினிஷ்டா அரசாங்கம்தேர்தலில் தோல்வி அடைந்ததைத் தொடர்ந்து அங்கு பெரும் அரசியற்சர்ச்சை உருவாகத் தொடங்கியுள்ளது. இதனால் அமைதியான ஆட்சி மாற்றம் ஒன்று நிக்கராக்குவாவில் ஏற்படுமா? என்ற கேள்வியும் எழுந்துள்ளது.

கடந்த வாரம் தேர்தலின் போட்டியிட்ட டானியல் ஒட்டேக்கா வலதுசாரி அமெரிக்க சார்பு வயலெற்றா ஷாமொறாவிடம் தோல்வியடைந்தது தெரிந்ததே. நிக்காராக் குவாவில் ஆட்சியில் இருக்கும் சன்டினிஷ்டா கட்சியினரிடப் பெரும் இராணு...

ஆனால் பெரும்பாலான சன்டினிஷ்டா இராணுவத் தளபதிகள் அதை ஒப்புக் கொள்ளவில்லை.

அவர்கள் பெருமளவில் ஆயுதங்களை மறைத்து வைக்கத் தொடங்கியுள்ளனர். இதனால் அமைதியான ஓர் ஆட்சி மாற்றம் ஏற்படுமா என்ற சந்தேகம் எழும்பியுள்ளது.

## ‘‘வித்தகபுரம்’’ உதயம்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பளைக்கு அண்மையிலுள்ள ஜே/108 இலக்கக் கிராமசேவகர் பகுதி, இரண்டு புதிய ஊர்ப்பணி அலுவலர் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

வட பகுதி ‘‘வித்தகபுரம்’’ ...

## மக்கள் முன்னணிக் கிளை அலுவலகங்கள்

(பருத்தித்துறை)

தமிழீழ விடுதலைப் புலிகளின் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி,, வடமராட்சிப் பிரதேச காரியாலயம் பருத்தித்துறையில் வெகு விரைவில் திறந்து வைக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்...

## ஹாட்லி சாரணர் பாசறை

(பருத்தித்துறை)

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரிசாரணர்கள் அண்மையில் பாசறை அமைத்து பயிற்சிகளைப் பெற்றனர்.

இப்பாசறைநிகழ்ச்சிகளுக்கு கல்லூரி உ.அதிபர் திரு.எஸ். பொன்னம்பலம் தலைமை தாங்கினார். சாரணர்கள் தமது பல திறமைகளையும் வெளிக்காட்டினார்கள்: இவர்களது பயிற்சிகளுக்கான செயன் முறைப் பரீட்சையும், கலை நிகழ்ச்சிகளும் இங்கு இடம் பெற்றன. சாரணர்களுக்கான சான்றிதழ்கள் வழங்...

# “சில முஸ்லிம் பிரதேசங்களில் சுயாட்சி நிர்வாகம் நடத்தலாம்”

### - கலாநிதி அன்ரன் பாலசிங்கம்

(மட்டக்களப்பு)

வட-கிழக்கு மாகாணத்தில் தனிமுஸ்லிம்மாகாண சபை என்ற கோரிக்கை நடைமுறை சாத்தியம் அல்ல, சில முஸ்லிம் பிரதேசங்களில் பிரதேச சுயாட்சி நிர்வாகம் அனுமதிக்கத் தயார்.

இத்தகவலை தமிழீழ விடுதலைப் புலிகள் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது.

வட-கிழக்கு மாகாணம் தமிழ்-முஸ்லிம்களின் தாயக பூமி என்பது சகலரினாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட வரலாற்று உண்மை இதனை சர்வஜன வாக்கெடுப்பு மூலம் உறுதிப்படுத்த தேவையில்லை.

ஸ்ரீ. ல. மு. காங்கிரஸ் மட்டும் தான் தனி மாகாணம் கோருகிறது. ஏனைய கட்சிகள், அமைப்புகள் எம்முடன் நடாத்திய சந்திப்புகளில் ஒன்றாக வாழ வேண்டும் என்ற நிலைப்பாடு கொண்டுள்ளார்கள்.

எந்த வடிவமென்றாலும் பிரிக்காதவகையில் உரிமைகள் பாதுகாக்கத்தக்கதாக பிரச்சினைக்கு தீர்வு காணப்படும் என விரும்புகிறார்கள்.

அதே நேரம் தமிழ் - முஸ்லிம் மக்கள் செறிந்து வாழ்கிறார்கள். ஒருவரை விட்டு ஒருவர் பிரிவதை நாம் விரும்பவில்லை. (37)

## மட்டக்களப்பில் அரச அதிபர் இல்லை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு கச்சேரிக்கு கடந்த 6 மாதங்களாக அரச அதிபர் சமூகமளிக்காத நிலையில் சகல அலுவல்களும் ஸ்தம்பித நிலையிலுள்ளது.

இம் மாவட்டத்தில் புனர்வாழ்வு, புனரமைப்பு வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

ஆனால் அரச அதிபர் சமூகமளிக்காமல் கொழும்பிலிருந்து செயற்படுவதால்பொது மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என கச்சேரி வட்டாரங்கள் தெரிவித்தன.

## செய்தியில் உண்மையில்லை!

(மட்டக்களப்பு)

ஸ்ரீலங்கா அரசு தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு மிடையிலான இரு தரப்பு பேச்சு வார்த்தையில் விடுதலைப்புலிகள் தளபதி வே. பிரபாகரன் மேற் கொள்ளலாம் என வெளிவந்துள்ள செய்திகளில் எவ்வித மான உண்மையும் இல்லை.

இத்தகவலை தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் தெரிவித்தார்.

இந்தியப்படை இம்மண்ணிலிருந்து முற்றாக வெளியேறியபின்பு தளபதி மக்களை சந்திக்கவிருக்கிறார் என்றும் அவர் தெரிவித்தார். (37)

## அப்பியாசக் கொப்பிகள் மட்டக்களப்பில் தட்டுப்பாடு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாநகரசபையினால் பாடசாலை மாணவர்களுக்கு அப்பியாச கொப்பி வழங்கும் நடவடிக்கைகள் போதியளவு அப்பியாச கொப்பிகள் கிடைக்காத காரணங்களினால் பாதிக்கப்பட்டுள்ளது.

மாநகரசபை 36,000 அப்பியாச கொப்பிகள் வாழைச்சேனைகாகித ஆலையிலிருந்து கொள்வனவு செய்ய விண்ணப்பம் செய்தது.

ஆனால் காகித ஆலையில் உற்பத்தி வீழ்ச்சி காரணமாக 2,000 அப்பியாச கொப்பிகள் மட்டும்தான் உடனடியாக வழங்கமுடியும் என ஆலைநிர்வாகம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில் தனியார் நிறுவனத்திடமிருந்து கொள்வனவு செய்து விநியோகிப்பது குறித்து ஆலோசனை செய்யப்படுவதாக மாநகரசபை ஆணையாளர் திரு. கே. கார்த்திகேசு தெரிவித்தார்.

…பிரதம மந்திரி தேவிலால் உட்பட ஜனதா தள் உறுப்பினர் பலரும் கலந்து கொண்டனர்.

## ஹாட்லி சாரணர் பாசறை

(பருத்தித்துறை)

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி சாரணர்கள் அண்மையில் பாசறை அமைத்து பயிற்சிகளைப் பெற்றனர்.

இப்பாசறைநிகழ்ச்சிகளுக்கு கல்லூரி உ.அதிபர் திரு.எஸ். பொன்னம்பலம் தலைமை தாங்கினார். சாரணர்கள் தமது பல திறமைகளையும் வெளிக்காட்டினார்கள்: இவர்களது பயிற்சிகளுக்கான செயன் முறைப் பரீட்சையும், கலை நிகழ்ச்சிகளும் இங்கு இடம் பெற்றன. சாரணர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கும் வைபவமும் இடம் பெற்றது.

கல்லூரியின் சாரணர் பிரிவு பொறுப்பாசிரியர்களான திரு. என். குணசீலன், திரு.எஸ். இரவீந்திரநாதன், திரு எஸ்.அரியலிங்கம் ஆகியோர் நிகழ்ச்சிகளை நெறிப்படுத்தினார்கள். (25)

## சன்டினிஷ்டா இராணுவம் எதிர்ப்பு

(மானக்குவா)

நிக்கரக்குவாவில் ஆட்சியில் இருக்கும் இடதுசாரி சன்டினிஷ்டா அரசாங்கம்தேர்தலில் தோல்வி அடைந்ததைத் தொடர்ந்து அங்கு பெரும் அரசியற்சர்ச்சை உருவாகத் தொடங்கியுள்ளது. இதனால் அமைதியான ஆட்சி மாற்றங் ஒன்று நிக்கராக்குவாவில் ஏற்படுமா? என்ற கேள்வியும் எழுந்துள்ளது.

கடந்த வாரம் தேர்தலின் போட்டியிட்ட டானியல் ஒட்டேக்கா வலதுசாரி அமெரிக்க சார்பு வயலெற்றா ஷாமொறாவிடம் தோல்வியடைந்தது தெரிந்ததே. நிக்காாக் குவாவில் ஆட்சியில் இருக்கும் சன்டினஷ்டா கட்சியினரிடப் பெரும் இராணுவம் ஒன்று உள்ளது. இவ்ராணுவம் கொன்றாஸ் கிளர்ச்சிக் காரர்களுக்கு எதிராகத் தொடர்ந்து போராடி வந்தது. தற்பொழுது இராணுவத்தை கலைப்பதா என்ற கேள்வி சன்டினிஷ்டா தலைவர்களிடம் எழுப்பியுள்ளது.

ஆனால் பெரும்பாலான சன்டினிஷ்டா இராணுவத் தளபதிகள் அதை ஒப்புக் கொள்ளவில்லை.

அவர்கள் பெருமளவில் ஆயுதங்களை மறைத்து வைக்கத் தொடங்கியுள்ளனர். இதனால் அமைதியான ஓர் ஆட்சி மாற்றம் ஏற்படுமா என்ற சந்தேகம் எழும்பியுள்ளது.

## “வித்தகபுரம்” உதயம்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பளைக்கு அண்மையிலுள்ள ஜே/108 இலக்கக் கிராமசேவகர் பகுதி, இரண்டு புதிய ஊர்ப்பணி அலுவலர் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

வட பகுதி ‘‘வித்தகபுரம்’’ எனப் பெயர் சூட்டப்பட்டுள்ளது. தெற்குப் பகுதி ‘‘பன்னாலை’’ என்ற பெயருடன் இயங்கும் இவ்விரு பிரிவுகளினதும் பிரிப்பு எல்லை அம்பனை-மாவிட்டபுரம் வீதியில் இருந்து மேற்கு நோக்கிச் சளனை, வல்லுவத்தை, சேர் கனகசபை வித்தியாலயம் ஆகியவற்றை ஊடறுத்துச் செல்லும் வெள்ள வாய்க்காலும், ஒழுங்கையும் அதற்கு அப்பாலுமாகும். மற்றைய எல்லைகள் ஜே. 108 இன் எல்லைகளே.

இதற்கான தீர்மானம் தலைமைப் பீட ஆணையாளரின் தலைமையில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்டது.

…வித்தார். அரசியல், கலாசார, பொளாதார பாதுகாப்பு அம்சங்களும் இவ்விணைப்பினுள் இடம்பெறு என்று ஜெனரல் எவ். பஷீர் கூறினார். இரு நாட்டு சட்டப் பேரவைகளும் இந்த அறிவிப்பை அங்கீகரித்த பின் இணைப்புப் பணி தொடங்கும்.

## மக்கள் முன்னணிக் கிளை அலுவலகங்கள்

(பருத்தித்துறை)

தமிழீழ விடுதலைப் புலிகளின் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி., வடமராட்சிப் பிரதேச காரியாலயம் பருத்தித்துறையில் வெகு விரைவில் திறந்து வைக்கப்படவுள்ளதாக அவிவிக்கப்பட்டுள்ளது.

கிராமங்கள் தோறும் விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி அலுவலகங்கள் திறக்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (25)

## சர்வதேச மகளிர் தின மகாநாடு

(யாழ்ப்பாணம்)

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு மகளிர் அபிவிருத்தி நிலையம் ஒழுங்கு செய்து நடத்தும் பெண்கள் எழுச்சி மகாநாடு மார்ச் 7ஆம் திகதி மாலை 2.30 மணியளவில் பாசையூர் சென். அந்தனீஸ் மகளிர் பாடசாலை மண்டபத்தில் நடை பெறவுள்ளது. இம் மகாநாட்டில் வட மாகாணக் கல்விப் பணிப்பாளர் செல்வி. திலகவதி பெரியதம்பி பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றவுள்ளார். இம் மகாநாடு மகளிர் அபிவிருந்தி நிலையப் பணிப்பாளர்திருமதி சரோஜா சிவச்சந்திரன் தலைமையில் இடம்பெறும்.

## வலிகாமம் மேற்கு

# மரதன் சைக்கிள் ஓட்டப் போட்டிகளும் இடம் பெறும்

(யாழ். விளையாட்டு நிருபர்)

வலிகாமம் மேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவு வருடாந்த விளையாட்டுப் போட்டி இம்மாதம் 17-ஆம், 18-ஆம் திகதிகளில் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

உதவி அரசாங்க அதிபர் திரு. து. வைத்திலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்த விளையாட்டு போட்டிக்கு பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட விளையாட்டு அதிகாரி திரு. க. ஏகாம்பரம் கலந்து கொள்ளவுள்ளார்.

இவ் விளையாட்டுப் போட்டியில் சிறப்பு நிகழ்ச்சியாக வலிகாமம் மேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்டவர்களுக்கிடையே ஆண்களுக்கான 25 மைல் சைக்கிள் ஓட்டப் போட்டியும், 10 மைல் மரதன் ஓட்டப்போட்டியும் பெண்களுக்கான 5 மைல் மரதன் ஓட்டப்போட்டியும் நடைபெறவுள்ளது.

இதற்கான சகல ஏற்பாடுகளையும் உதவி அரசாங்க அதிசர் தியு. து. வைத்திலிங்கமும் விளையாட்டு அதிகாரி திரு. கே. யீலிக்கம் சகல கிராமசேவை அலுவலர்களும் மேற்கொண்டுள்ளனர்.

## மாணவர்களுக்கு பரிசு

(பருத்தித்துறை)

தும்பளை சைவ மன்றம் நடாத்திய மகா சிவராத்திரி விழாவிலே தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தில் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த எட்டு மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கும் வைபவமும் இடம் பெற்றது. (25

## 40 ஓவர் கிரிக்கெட் போட்டி

# கனகரத்தினம் மகாவித்தியாலயம் 62 ஓட்டங்களால் வெற்றி

(யாழ். விளையாட்டு நிருபர்)

யாழ். கனகரத்தினம் கல்லூரிக்கும் யாழ். வங்கி அணிக்கும் இடையில் அண்மையில் கனகரத்தினம் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற 40 ஓவர் மட்டுப்படுத்தப்பட்ட சிநேகபூர்வமான கிரிக்கெட் போட்டியில் கனகரத்தினம் மகாவித்தியாலயம் 62 ஓட்டங்களால் வெற்றியீட்டியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய கனகரத்தினம் கல்லூரி 40 ஓவர்களில் 163 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. கனகரத்தினம் மகாவித்தியாலய அணித்தலைவர் றொனி மிகவும் சிறந்த முறையில் விளையாடி 64 ஓட்டங்களை பெற்றமை குறிப்பிடத்தக்கது. அருள்ராஜா 24 ஓட்டங்களைப் பெற்றார்.

பந்து வீச்சில் லோகநாதன் 20 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கட்டுகளையும் பாலன் 17 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கட்டுக்களையும் கைப்பற்றினர். ஒன்றிணைந்த வங்கி அணி 26-1 ஓவர்களில் சகல விக்கட்டுகளையும் இழந்து 101 ஓட்டங்களை மாத்திரம் பெற்றுள்ளது. றொனி 26 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் மலர்அன்பன் 21 ஓட்டங்களுக்கு 5 விக்கட்டுகளையும் கைப்பற்றினார்கள்.

திருவாளர்கள் ரவீந்திரா எஸ். பாலன் ஆகியோர் மத்தியஸ்தர்களாகக் கடமை புரிந்தனர். (42)

# பஸ் நிலையம் இல்லை ஆனால் அத்திவாரக்கல் இருக்கிறது

(மட்டக்களப்பு)

வட-கிழக்கு மாகாண நிதியமைச்சர் திரு. பி. கிருபாகரன் அத்திவாரக்கல் நாட்டிய கழுவாஞ்சிக்குடி பஸ் நிலையம் எங்கே?

இக் கேள்வியை பஸ் பயணிகள் பரவலாக எழுப்புகிறார்கள்.

மேற்படி பஸ் நிலைய அத்திவாரக்கல் கடந்த ஒரு வருடம் முன்பு நாட்டப்பட்டன.

ஆனால் பஸ் நிலைய கட்டடத்திற்கு பதிலாக தற்போது ஓலைக் கொட்டில் தான் அமைக்கப்பட்டுள்ளது- (37)

# முஸ்லிம் கிராமங்களுக்கு இம்மாதம் ஹமீத் செல்வார்

(மட்டக்களப்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் ஸ்ரீலங்கா அரசு பேச்சு வார்த்தையில் அரச பிரதிநிதியாக செயல்படும் உயர் கல்வித்துறை அமைச்சர் ஜனாப் ஏ.சி.எஸ். ஹமீத் விரைவில் கிழக்கு மாகாணத்திலுள்ள முஸ்லிம் பிரதேசங்களுக்குவிஜயம் செய்யவிருக்கிறார்.

இரு தரப்பு பேச்சுவார்த்தையில் முஸ்லிம்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகளுக்கும் தீர்வு காணப்பட வேண்டும்.

இந் நிலையில் முஸ்லிம்களின் கருத்துக்களை திரட்டுவதற்காக மாவட்ட ரீதியில் முஸ்லிம்களுக்கிடையிலான சந்திப்பு நடாத்த அவர் தீர்மானித்துள்ளார்.

இம்மாத இறுதியில் தனது விஜயத்தை ஆரம்பிக்கவிருக்கிறார்.

## பிறந்ததின வாழ்த்து

**போசராசா - சிவசங்கர்**

இன்று 6-3-90 போசராசா சிவசங்கர் தனது முதலாவது பிறந்த தினத்தை தனது இல்லத்தில் சுற்றத்தார் நண்பர்கள் சூழ வெகு சிறப்பாக கொண்டாடும் அவரை பல்கலையும் சற்று நின்புகழ் வையகத்தில் நிலைத்திட நீடூழி வாழ்கவென வாழ்த்தும்

அப்பா, அம்மா, அம்மம்மா, தாத்தா, மாமா, சித்தி, கனடா சித்தி, சித்தப்பா, ஜேர்மன் சித்தப்பா, அத்தை, மாமா, மச்சாள், பெரியம்மா, பெரியப்பா, அக்காமார், வேலணை அப்பப்பா, அப்பம்மா, அத்தைமார், மாமாமார், மச்சாள்மார், மச்சான்மார், பெரியப்பா, பெரியம்மா, அக்காமார், அண்ணன்மார்.

சிவசக்தி கூல்பார்

பஸ் நிலையம் யாழ்ப்பாணம்.

R.118


# பொலிஸ் நிலையத்தை மாற்றி தபால் நிலையம் செயல்படட்டும்

## பொலிஸ்மா அதிபரிடம் கோரிக்கை

(பருத்தித்துறை)

பருத்தித்துறை தபால் நிலைய கட்டிடத்தில் இயங்கி வரும் பருத்தித்துறை ஸ்ரீ லங்கா பொலிஸ் நிலையத்தை இடம் மாற்றுமாறு பருத்தித்துறை பிரஜைகள் குழு ஸ்ரீ லங்கா பொலிஸ் தலைமைப் பீடத்தைக் கேட்டுள்ளது.

பருத்தித்துறைப் பகுதி மக்களின் நலனைக் கருத்திற் கொண்டு, தற்போது பல்வேறு வகையான கஷ்டங்களுடன் இயங்கி வரும் பருத்தித்துறை தபால் நிலையத்தை தபால் நிலையச் சொந்தக்கட்டிடத்திலேயே இயங்க வைக்க வேண்டியிருப்பதனாலேயே தற்போது பருத்தித்துறை தபால் நிலையத்தில் இயங்கி வரும் ஸ்ரீ லங்கா பொலிஸ் நிலையத்தை இடம் மாற்ற வேண்டிய முக்கியத்துவம் ஏற்பட்டுள்ளதாகப் பருத்தித்துறை பிரஜைகள் குழு பொலிஸ் தலைமைப் பீடத்திற்குச் சுட்டிக்காட்டியுள்ளது. (25)


மகன்:- அப்பா, அப்பா நான் சந்தைக்குப் போய் வருகின்றேன்.

அப்பா:- மகனே வரும் வழியில் அச்சுவேலி பஸ் ஸ்ராண்டில் சண்முகரெட்ணம் அண்ணன் 'ஈழநாதம்' பத்திரிகை விற்பனை செய்கிறாராம். ஒரு ஈழநாதம் வேண்டி வா.

மகன்:- சரியப்பா.

அப்பா:- மகனே ஈழநாதம் பத்திரிகை வேண்டிப் போட்டுத் தான் நீ சந்தைக்குப் போ. இல்லாவிடில் நீ திரும்பி சந்தையால் வர ஈழநாதம் முடிந்திடும். அதற்கு இப்ப பெரிய டிமாண்டாம்.


### சென். ஜோன்ஸ் கல்லூரி

# 100 மீற்றர் ஓட்டப் போட்டியில் எதிர்வீரசிங்கம் புதிய சாதனை

(யாழ் விளையாட்டு நிருபர்)

யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரியின் வருடாந்த மெய்வல்லுனர் போட்டி அண்மையில் கல்லூரி மைதானத்தில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

இப் போட்டியில் இம்முறை 11 வயதுக்குட்பட்டவர் பிரிவில் 100 மீற்றர் ஓட்டப் போட்டியில் ஜே. எதிர்வீரசிங்கம் புதிய சாதனையை ஏற்படுத்தியது குறிப்பிடத்தக்கது.

இந்த விளையாட்டுப்போட்டியில் சம்பியன்களாகத் தெரிவு செய்யப்பட்வர்களின் விபரம் பின்வருமாறு,

19 வயதுப் பிரிவில் புஸ்பவினோகரனும், எக்ஸ் எஞ்சலிங்மனும் கூட்டுச் சம்பியன்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

17 வயதுப் பிரிவில், ஜே. எதிர்வீரசிங்கம் டி. என். றொயினுப் கூட்டுச் சப்பியன்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

15 வயதுப் பிரிவில், ஜீ. வசந்தகுமார் சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டார்.

12 வயதுப் பிரிவில், என். நவதீபனும், கே. கிரிதர்ஷனும் சம்பியன்களாகத் தெரிவுசெய்யப்பட்னர்,

இவ் மெய்வல்லுனர்போட்டியில் ஜோன்சன் இல்லம் 208 புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தைபும், விற்றோ இல்லம் 160 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தையும்ஹன்டி இல்லம் 1:2 புள்ளிகளைப் பெற்று மூன்றாம் இடத்தையும் பெற்றன.

மேற்படி விளையாட்டுப் போட்டிக்கு வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் தொழில் நுட்பப் பிரிவின் விளையாட்டுப் பணிப்பாளர் திரு, கெ. என். எஸ். மொறிஸ் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார்,

திருமதி மொறிஸ் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில்களை வழங்கினார். (42)


# லிங்கம் ஸ்ரோர்ஸ்

வல்லை றோட், அச்சுவேலி.

(பலசரக்குப் பொருட்கள் விற்பவர்கள்)

(B.172)



**FRENCH LANGUAGE CORUSE**

பிரென்ஞ்ச் மொழி வகுப்புகள்

(யாழ். பிரென்ஞ்சிய நட்புறவுச் சங்கத்தில்)

SPOKEN FRENCH AND BEGINNERS

COMMENCES ON 10th MARCH SATURDAY AT 9. A. M.

INFORMATION AND REGISTRATION

**Alliance Francaise De Jaffna**
**130, 1st Cross Street,**
**Jaffna.**

6th March & 8th March 1990.

Cost Should not Exceed Morethan Rs 250/- Per day.(B-165)


## விவேகானந்தர் 125ஆவது ஆண்டுவிழா

(பருத்தித்துறை)

சுவாமி விவேகானந்தரின் 125ஆவது ஆண்டு விழாவையொட்டி பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஸ்ணசாரதாசேவாச்சிரமம் சாவகச்சேரிமகளிர்வித்தியாலயத்தில் 7 ஆம் திகதி இராமகிருஸ்ண விவேகானந்த நூல் கண்காட்சியொன்றை நடாத்துகின்றது. (25)

# வள்ளுவர் பாரதியாரை சோவியத் எழுத்தாளர் அறிவர்

(கொழும்பு)

''சோவியத் எழுத்தாளர்கள் திருக்குறளையும் மகாகவி பாரதியையும் நன்கு அறிந்து வைத்துள்ளார்கள்; தமிழ் இலக்கியத்தையும் அது தொடர்பான நவீன வளர்ச்சிகளையும் அறிய ஆர்வம் காட்டுகிறார்கள்,''

இவ்வாறு சோவியத் எழுத்தாளரான அனதொலி பார்பரா பத்திரிகையாளர் சந்திப்பின்போது தெரிவித்தார்.

ரகுநாதன், மு. வரதராசன், கு. அழகிரிசாமி போன்றவர்களின் படைப்புக்களும் சோவியத் மொழிகளில் வந்துள்ளன.

சோவியத் எழுத்தாளர்கள் சுதந்திரமாக சிந்திக்கிறார்கள் அவர்கட்கு எந்தவித கட்டுப்பாடும் கிடையாது, நாங்கள் ஈழத்து தமிழ் இலக்கிய வளர்ச்சியைப் பற்றி அறிந்து கொள்ள விரும்புகிறோம். ஈழத்து படைப்புகளை சோவியத் நாட்டில் அறிமுகப்படுத்த

## இடமாற்றம்

(பருத்தித்துறை)

வவுனியா கச்சேரியில் பொதுசனத்தொடர்புகள் உத்தியோகத்தராக இருந்த திரு. ஆ. சர்மா யாழ்ப்பாணம் கச்சேரிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். (25)

## போட்டிகள்


# ஒமேகா

சகல குளிர் சாதனப் பெட்டிகள்
மின்சார உபகரணங்கள், மோட்டார் ரான்ஸ்போமர்
கிறைண்டர் ஆகியன றிவைண்டிங்
செய்பவர்கள்.

ஒமேகா
மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

(B- 170)



தமிழீழ மண்ணின் மீட்பிற்காக போராடி உயிர் நீத்த மண்ணின் மைந்தர்களுக்கு

எமது கண்ணீர் அஞ்சலி

'ஈழநாதம்' ஈழமெங்கும்

ஒலிக்கட்டும்.

மின்சார உபகரணங்கள், பைப் வகைகள்



தற்கால நாகரீகத்திற்கேற்ற

Jaffna.

6th March & 8th March 1990.

Cost Should not Exceed Morethan Rs 250/- Per day.(B-165)

19 வயதுப் பிரிவில் புஸ்ப வினோகரனும், எக்ஸ் எஞ்ச புள்ளிகளைப் பெற்று முத லாம் இடத்தைபும், விற்றோ

# வள்ளுவர் பாரதியாரை சோவியத் எழுத்தாளர் அறிவர்

(கொழும்பு)

''சோவியத் எழுத்தாளர் கள் திருக்குறளையும் மகாகவி பாரதியையும் நன்கு அறிந்து வைத்துள்ளார்கள்; தமிழ் இலக்கியத்தையும் அது தொடர்பான நவீன வளர்ச் சிகளையும் அறிய ஆர்வம் காட்டுகிறார்கள்,''

இவ்வாறு சோவியத் எழுத் தாளரான அனதொலி பார் பரா பத்திரிகையாளர் சந்திப் பின்போது தெரிவித்தார்.

இலங்கை முற்போக்குஎழுத் தாளர் சங்கம் ஏற்பாடு செய் திருந்த இச்சந்திப்பில் சோவி யத் எழுத்தாளர்களான அன தொலி பார்பரா, வியச்சில் வாவ் குப்ரியானோவ் கலந்து கொண்டார்கள்.

திரு பிரேமஜி ஞானசுந்தரம் எழுத்தாளர்களை அறிமுகம் செய்து வைத்தார்.

எழுத்தாளரும், கவிஞருமான பார்பரா கருத்துத் தெரிவிக்கையில்,

நவீனதமிழ் இலக்கியத்தை கற்பதில் சோவியத் மக்கள் விரும்புகிறார்கள். மகாகவி பாரதி, கல்கி, புதுமைப்பித்த துன்போன்றவர்களின் எழுத்க் கள் அவர்களுக்கு நன்கு பரிச் சயமாகி உள்ளன. சிதம்பர ரகுநாதன், மு. வரதராசன், கு. அழகிரிசாமி போன்றவர் களின் படைப்புக்களும் சோவியத் மொழிகளில் வந் துள்ளன.

சோவியத் எழுத்தாளர்கள் சுதந்திரமாக சிந்திக்கிறார் கள் அவர்கட்கு எந்தவித கட் டுப்பாடும் கிடையாது, நாங் கள் ஈழத்து தமிழ் இலக்கிய வளர்ச்சியைப் பற்றி அறிந்து கொள்ள விரும்புகிறோம். ஈழத்து படைப்புகளை சோவி யத் நாட்டில் அறிமுகப்படுத்த விரும்புகிறோம் என்றார்.

திரு. வியச்சீல்லாவ் குப்பிரி யானோவ் பேசுகையில் ''சோவியத் நாட்டின் இலக் கிய வரலாறு தமிழில் இன் னும் ஓரிரு மாதங்களில் வெளி வர உள்ளது இப்பொழுது சோவியத் நாட்டின் இலக்கிய வரலாற்றை நன்கு புரிந்து கொள்ள முடியும்.

புதுக்கவிதை வடிவத்தின் மூலம் போராட்ட உணர்வு களை வெளிப்படுத்தலாம் இத்தகைய புதிய வடிவங்கள் மக்களிடையே பெரும் வர வேற்பைப்பெறுகின்றன. என் றார்.

பத்திரிகையாளர் சந்திப் பின் இறுதியில் எழுத்தாளர் ராஜ ஸ்ரீகாந்தன் நன்றி கூறி னார். (27)

## ஆண்டுவிழா

(பருத்தித்துறை)

சுவாமி விவேகானந்தரின் 125 ஆவது ஆண்டு விழாவை யொட்டி பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஸ்ணசாரதாசேவாச் சிரமம் சாவகச்சேரிமகளிர்வித் தியாலயத்தில் 7 ஆம் திகதி இராமகிருஸ்ண விவேகானந்த நூல் கண்காட்சியொன்றை நடாத்துகின்றது. (25)

## இடமாற்றம்

(பருத்தித்துறை)

வவுனியா கச்சேரியில் பொது சனத்தொடர்புகள் உத்தியோ கத்தராக இருந்த திரு. ஆ. சர்மா யாழ்ப்பாணம் கச்சே ரிக்கு இடமாற்றம் செய்யப் பட்டுள்ளார். (25)

## போட்டிகள்

(உரும்பிராய்)

உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் இலங்கைக்கிளை யினர் (67, புகையிரத நிலைய வீதி, யாழ்ப்பாணம்) ஆண், பெண் இருபாலாருக் கும் தனித்தனியாக கட்டுரை, பேச்சுப் போட்டிகளை மூன்று பிரிவுகளாக நடாத்தவுள் ளனர். 15 வயதிற்குக் கீழ் உள்ளவர்கள் கீழ்ப்பிரிவு என வும், 15 இலிருந்து 20 வய துக்குக் கீழ் உள்ளவர்கள் மத் திய பிரிவு எனவும், 20 வய திலிருந்து 30 வயதிற்குக் கீழ் உள்ளவர்கள் மேற்பிரிவு என வும் வகுக்கப்பட்டுள்ளது. விண்ணப்ப முடிவு திகதி 31-03-90. விண்ணப்பபடிவங் கள் தேவையானோர் மேல் உள்ள காரியாலயவிலாசத்தில் பெற்றுக் கொள்ளலாம். (32)

சகல குளிர் சாதனப் பெட்டிகள்
மின்சார உபகரணங்கள், மோட்டார் ரான்ஸ்போமர்
கிறைண்டர் ஆகியன றிவைண்டிங்
செய்பவர்கள்.

ஓமேகா
மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.
(B- 170)

தமிழீழ மண்ணின் மீட்பிற்காக போராடி
உயிர் நீத்த மண்ணின் மைந்தர்களுக்கு
எமது கண்ணீர் அஞ்சலி
'ஈழநாதம்' ஈழமெங்கும்
ஒலிக்கட்டும்.

மின்சார உபகரணங்கள், பைப் வகைகள்
என்பனவற்றை நீங்கள் நிதான
விலையில் பெற்றுக் கொள்ள
நாடவேண்டிய இடம்

யுனிரோன் எலக்ரிக்கல்ஸ்
காங்கேசன்துறை வீதி, தட்டாதெருச் சந்தி,
யாழ்ப்பாணம்.

உங்கள் வீடுகளுக்கோ, தொழில் நிலையங்களுக்கோ சிறந்த முறையில் ஒப்பந்த அடிப்படையில் மின் இணைப்பு செய்து கொடுக்கப்படும், அத்துடன் ரீ.வி. டெக், றேடியோ, மின் விசிறி ஆகியனவும் சிறந்த முறையில் உரிய நேரத்தில் திருத்திக் கொள்ளப்படும்.
(B.167

தற்கால நாகரீகத்திற்கேற்ற
நைலக்ஸ் கொட்டன் சாறிகள்
திருமண வைபவங்களுக்குத் தேவையான
சூட்டிங் சேட்டிங்
றெடிமேற் சேட்ஸ் சோட்ஸ்
சிறுவர் சிறுமியருக்கேற்ற
றெடிமேற் ஆடை வகைகளை
ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ள
யாழ்நகரில் சிறந்த ஸ்தாபனம்

ஸ்ரீசுபாகி ஜவுளி மாளிகை
151, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
(B 169)

ஈழநாதம் தமிழீழ மக்களின் இதயநாதமாக ஒலிக்க எமது வாழ்த்துக்கள்!

LAKSHUMYNATHAN
General Merchants, Commission Agents
& Hardware Dealers

தெல்லிப்பளை.
(B.157)

வாழ்க ஈழநாதம்!
யாழ்ப்பாணத்தில் சிறந்த சைவ உணவகம்!

மலாயன் கபே
பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.
(B- 156)

சிந்தனைக்கு

தன்னுயிர் நீப்பினும் செய்யற்க தான் பிறிது
இன்னுயிர் நீக்கும் வினை

- திருக்குறள்

ஈழநாதம்

31, வைமன் வீதி, யாழ்ப்பாணம். 06 - 03 - 90

# மினிபஸ் தொல்லை!

யாழ்ப்பாண நகரில் மக்கள் நடமாட்டமும், வாகனப் போக்குவரத்தும் அதிகமாகவுள்ள ஆஸ்பத்திரி வீதியில் மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த இரு போராளிகளை வேகமாக வந்த மினிபஸ் மோதி ஒருவர் பலத்த காயமடைந்தார்,

இவரது மண்டை உடைந்து சுயநினைவை இழந்துவிட்டார். இவர் சிகிச்சைக்காக கொழும்புக்குக் கொண்டு செல்லப்பட்டிருக்கிறார்.

மூன்று தினங்களுக்கு முன் யாழ். நகரில் காங்கேசன்துறை வீதியில் சிவன் கோயிலுக்குச் சமீபத்தில் வேகமாக வந்த மினிபஸ் சைக்கிளில் வந்த ஒருவரை மோதியதில் அவர் ஆபத்தான நிலையில் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டார்.

சில வருடங்களுக்கு முன்னர் காங்கேசன்துறை வீதியில் இரண்டு மினிபஸ்கள் ஓட்டப்போட்டியிலீடுபட்ட போது நாச்சிமார் கோயிலுக்கு அருகேயுள்ள கடை மீது ஒரு மினிபஸ் பாய்ந்ததில் கடைக்காரர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டார். இத்துயரச் செய்தியைக் கேள்விப்பட்டதுமே அவரது மனைவி தற்கொலை செய்து கொண்டார்.

கணவனும் மனைவியும் ஒரே நேரத்தில் சிதையில் வைத்துத் தகனம் செய்யப்பட்டதைக் கண்டு கண்ணீர் விட்டோர் பலர். அந்தக் குடும்பத்தின் குழந்தைகள் இன்றும் கண்ணீர் விடுகின்றன.

இந்தச் சோக நிகழ்ச்சிக்குப் பின்னரும்கூட யாழ்ப்பாணத்தில் காங்கேசன்துறை வீதியில் மினிபஸ்களின் ஓட்டப்போட்டி குறைந்து விடவில்லை.

யாழ்ப்பாணத்தில் மினிபஸ்காரர் தமக்கென ஒரு சாம்ராஜ்யமே நடத்துவதாகத்தான் சொல்லவேண்டும்.

# மனித உரிமைகளை மீறும் நாடுகளுக்கு மேற்கு ஐரோப்பிய நாடுகள் உதவா

நேற்றைய தொடர்ச்சி

தமிழ் மொழிக்கு அரசகருமமொழி அந்தஸ்து வழங்கி சிங்கள மொழியுடன் சமானமாக்கியுள்ளோம். தமிழரை வடக்கிலும் கிழக்கிலும் மாகாணப் பொலிஸ் படையில் சேர்த்துள்ளோம். விரைவில் தமிழரை பாதுகாப்புப் படையிலும் சேர்க்கவுள்ளோம்.

''சிங்களப் பொதுசனங்களும், பௌத்த பிக்குகளும், எதிர்க்கட்சிகளும் தமிழர்களுக்கு சுயாட்சி வழங்கி ஒரு பல்இனச் சமூகமாக இலங்கை விளங்குவதை ஏற்றுக்கொள்வார்களா?''

''ஆம் என்று என்னால் பதிலளிக்கலாம். ஆனால் உடனடியாக இதைச் செய்ய முடியாது. முழு நாடுமே இரத்தம் சிந்திக் களைத்துவிட்டது. பல் இனச சமூக அமைப்பை சிங்களவர் எதிர்பார்கள் என்று நான் நினைக்கவில்லை. ஆட்சியில் இருக்கும் அரசியல் கட்சி பலமாகவிருந்தால், அது மக்களைத் தன் பக்கம் திருப்ப முடியும்'' இவ்வாறு பிரேமதாஸ கூறினார்.

கொழும்பில் நான் நூற்றுக்கும் அதிகமானவர்களைச் சந்தித்துப் பேசியுள்ளேன். அவர்கள் எல்லோரும் 'பல்லின சமூகங்களின் சுகவாழ்வு தொடர்பாக ஒரே மாதிரியான கருத்தைக் கொண்டிருந்தார்கள் என்று சொல்வதற்கில்லை. முதலில் இந்திய இராணுவத்தின் வெளியேற்றத்துடன் பெருமளவிலான ஒரு இரத்தக்களரி ஏற்பட இடமில்லை. விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்துக்கும் இடையில் சமாதானம் நிலவாது போனால் 'ஆயுதந்தரித்த ஒரு சமாதானச் சகவாழ்வு' நிலை நாட்டில் ஏற்படலாம் என்று ஒரு அமைச்சர் என்னிடம் கூறினார். இரண்டாவது ஜே. வி. பி. போராளிகள் அரசியலில் ஒரு ஸ்திர நிலையை அடையப் பல வருடங்கள் பிடிக்கலாம். அதற்கிடையில் பாராதினப்பட்டுள்ள இளைஞர்களை வசப்படுத்துவதற்கான ஒரு திட்டத்தை வகுத்து, அதைச் செயற்படுத்துவதற்கான நேரகாலும் அரசாங்கத்துக்குக்

இந் நிலையில், கண்டபடி கிராமங்களில் இளைஞர் கொல்லப்படுவது அரசாங்கத்துக்கு களங்கத்தை ஏற்படுத்தியுள்ளது. எரிந்த நிலையில் வீதி ஓரங்களில் எறியப்படும் சடலங்களைத் தூக்க மக்கள் அஞ்சுகிறார்கள். டிசம்பர் (1989) மாதத்தில் 14 நாட்களில் 615 பேர் கொலையுண்டார்கள் என அரசாங்க தரப்புப் பத்திரிகையான டெய்லி நியூஸ் செய்தி வெளியிட்டுள்ளது,

மரணப் படைகளை யார் முடுக்கி விடுகிறார்கள் என்பதை தெரியாதது போல் அரசாங்கம் மௌனியாக இருக்கிறது. ஆனால் இந்தக் கொலைகளை இராணுவம் செய்திருக்கலாம் என்பதைப் பிரேமதாஸா ஏற்றுக் கொள்ளுகிறார். இராணுவத்தினரின் குடும்பங்களை ஜே.வி.பி அணியினர் கொலை செய்வதற்கெதிரான இராணுவத்தின் பழிவாங்கல் நடவடிக்கைகளே இந்தக் கொலைகள் என்பது மக்களுக்கு ஊர்ஜிதம். இக் கொலைகள் இலங்கை மக்களைப் பயப்பிராந்தி அடையைச் செய்வதோடு, மனிதனில் மனிதன் விளைவிக்கும் கொடூரங்களுக்கு எதிரான மக்களின் உணர்வையும் மரக்கச்செய்து விடுகிறது. ''நாட்டில் இரத்தம் சிந்தப்பட்டது. இன்னமும் இரத்தம் சிந்துகிறது. இதற்கெதிராக எம்மால் ஒன்றும் செய்யமுடியாது.

மேற்கு ஐரோப்பியர் மனித உரிமைகளுக்கு மதிப்புக் கொடுப்பவர்கள். மனித உரிமைகள் மீறல் தொடர்பாகக் குற்றவாளிகளைக் கண்ட அரசுகளுக்கு கஜனாவை நிரப்ப அவர்கள் பணம் தர மாட்டார்கள்.

## ஸ்ரீமாவோவும் அதிகாரப் பரவலாக்கத்தை விரும்புகிறார்

தமிழீழ விடுதலைப் புலிகளால் அழிக்கப்படுவார்கள் என்ற பயத்தை காங்கிரஸ் (I) யைச் சேர்ந்தவர்களும் ஈ. பி. ஆர். எல். எவ் - ம் இந்தியாவில் பரப்பி வந்த கதை கொழும்பில் எதிரொலிக்கவில்லை. திருமதி ஸ்ரீமாவுக்கு இது பற்றிய பயம் இருப்பதாகத் தெரியவில்லை. நான் கலந்து கொண்ட இராப்போசன விருந்தொன்றில் வடக்கிற்கும்கிழக்கிற்குமான அதிகாரங்களைப் பரவலாக்குவதில் ஆட்சேபனை இல்லையென்றும், தென் இலங்கையில் அதிகாரம் பரவலாக்கப்படுவதை தான் எதிர்ப்பதாகவும் என்னிடம் கூறினார். தலைமைத்துவத்தை இளைஞர்களுக்கு வழங்கும்படி ஸ்ரீமாவோ வற்புறுத்தப் படுவதோடு இலங்கையில் உள்ள மரபுரீதியான எதிர்க்கட்சிகளைப் போல் எஸ். எல் எப் பியில் உள்ள ஸ்தாபன ரீதியான நெருக்கடி பாராளுமன்றத்தில் மிக

ஏற்படுத்திக் கொண்டால் இந்தியத் தமிழர்களைப் பற்றிய வழக்கமான மரபு வழி வந்த கருத்து அகன்றுவிடும் என்று பேராசிரியர் சிவத்தம்பி குறிப்பிட்டார்.

இலங்கை மக்கள் இன்றும் தமது சமூகங்களைப் பற்றியும் சமயங்களைப் பற்றியும் சிந்திக்கிறார்கள் என்று கூறிய சிவத்தம்பி, ''இந்தியாவிலும் அப்படித்தான். ஆனால் பல இந்தியர்களுக்கு அவர்களது சமூகங்களுக்கும் குலக் குழுக்களுக்கும் மேலாக ஒரு இந்தியா தானுண்டு.'' என்றார். அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் இன்று நிலமை மாறிவருகிறது. சிங்களப்புத்திஜீவிகள் இலங்கை ஒரு பல்லினச் சமூகம் என்பதை உணர்ந்துள்ளனர். இந்த உணர்வு சிங்கள வெகுஜனங்கள் மத்தியிலும் பரவும் என்றார் சிவத்தம்பி.

இந்தியாவுடனான இலங்கையின் அணுகுமுறை தற்போது சிறிது தளர்த்தப்பட்டுள்ளது. இந்திய இராணுவம் இலங்கையை விட்டு விலகியவுடன் பல வகையான பொருளாதார உறவுகளை வளர்த்துக் கொள்ளப் பிரேமதாசா விரும்புகிறார்.

''நாம் ஒன்றிணைந்து செயற்படவேண்டும்'' - என்று இளைஞரும் திறமைசாலியும் இலங்கை அரசியலில் நம்பிக்கையான எதிர்காலம் உடையவருமான தோட்டத் தொழில்த்துறை அமைச்சர் காமினிதிஸாநாயக்க எமக்குக் கூறியதுடன், தான் இந்திய வர்த்தக அமைச்சர் அருண் நேருவுடன் ஒரு சந்திப்புத் தொடர்பாகப் பதிலை எதிர்பார்த்திருப்பதாகவும் தெரிவித்தார். ''நாம் இணைந்து செயற்படுவதன் மூலம் எமது நாடுகளில் தேயிலைக்கு போட்டியை ஏற்படுத்தவும், உத்வேகத்தை அளிக்கவும் விரும்புகிறோம்'' என்றார் காமினி. இந்தியாவுடன் சண்டை போடாமல் ஒன்றிணைந்து செயற்படும்படி 1987 முதல் பலம்படைத்த முக்கியமான அரசுகள் - சோவியத் ரஸ்யா, ஐக்கிய அமெரிக்கா, இங்லாந்து, சீனா, ஆகியன இலங்கைக்குச்சொல்லி வருவதால் தான் இலங்கை இந்தியாவின் பக்கம்

### பவானி சென்குந்தா

நாம் உயிரோடு வாழ்வதற்குக் கொடுத்து வைத்தவர்கள்'' ஒரு இளம் பத்திரிகையாளர் என்னிடம் பிரஸ்தாபித்தார். எப்படியும் சர்வதேச மனித உரிமைகள் நிறுவனம் இந் நிகழ்வுகள் பற்றிக் கவனம் எடுக்கத் தொடங்கியது. இலங்கையில் இடம்பெறும் கொலைகளுக்கு எதிரான முதற் கண்டனம் சர்வதேச மன்னிப்புச் சபையிடமிருந்து கிளப்பியது. வெளியுறவு அமைச்சர் ரஞ்சன் விஜெயரட்ணா கோபத்தின் அதீதமான விளைவினால் சர்வதேச மன்னிப்புச் சபை 'பயங்கர வாதிகளின் நிறுவ

சொற்ப ஆசனங்களை கட்சிகளைப் பலவீனத்தின் எல்லைக்கோட்டிற்கு தள்ளியுள்ளன. ஜனநாயக நீரோட்டத்தில் இணைய விரும்பும் ஜே. வி. பியினரையும் அவர்களது ஆதரவாளர்களையும் இணைந்து, நாட்டிலுள்ள அரசியல் சக்திகளுக்கும் தனக்கிடையில் ஒரு தொடர்பை ஏற்படுத்த பிரேமதாசா விரும்புகிறார். விடுதலைப் புலிகள் தமது ஈழக் கோரிக்கையை கைவிடும் பட்சத்தில் அவர்களையும் சேர்த்துக் கொள்ள விரும்புகிறார்.

## இந்தியத் தொடர்பு

# ஊர்சுற்றி எழுதுவது

ஏழு வயதுச் சிறுவன். குழந்தைகளுக்கே உரிய குழப்படிகள் இவனிடம் கொஞ்சம் அதிகம்! தாத்தா வீட்டுக்குப் போயிருந்தான். வீட்டில் அம்மா அப்பா என்றால் அடிவிழும் என்ற பயமிருக்கும் தாத்தா வீட்டில் செல்லம் அதிகம்!

கையில் ஒரு தீப்பெட்டியை வைத்துக் கொண்டிருந்தான். அதை என்ன செய்யப் போகிறான் என்று வீட்டிலுள்ளவர்கள் அசட்டையாக இருந்துவிட்டார்கள். சற்றுநேரம் கழித்து வீட்டுவேலியில் நெருப்புப் பிடித்துக்கொண்டதும் வீட்டிலுள்ளவர்கள் பதறியடித்துத் தண்ணீர் ஊற்றி அணைத்துவிட்டார்கள். நல்லவேளை யாரும் கவனிக்காமலிருந்தால் வேலியில் பிடித்த தீ அந்தப் பகுதியையே அழித்துப் பெரும் சேதத்தை ஏற்படுத்தியிருக்கும்!

அந்தச் சிறுவனுக்கு இந்த விளைவெல்லாம் பற்றி என்ன தெரியும்!

சிறுவன் கையில் எது எது கொடுக்தாக வேண்டுமென்பதுதான் பெரியவர்கள் கவனிக்க வேண்டிய விஷயம்! பெரியவர்கள் மட்டும் என்ன புத்திசாலிகளே

வடக்கு-கிழக்கு மாகாண சபையில் பொரியவர்கள் தானிருக்கிறார்கள். அது படுப்பாடு. சபையின் நிர்வாசத்தின் கீழ் கொண்டுவரப்பட்ட திணைக்களங்களைச் சேர்ந்த ஊழியர்கள பாடாய்ப்படுகிறார்கள் வீடமைப்புத்திணைக்களத்தைச் சேர்ந்த ஊழியர்களின் நிலைபற்றி நமது பத்திரிகையில் வெளிவந்திருந்கது. அதன் விளைவு அங்குள்ள ஊழியர் ஒருவருக்குத் திடீர் இடமாற்றம்!

★ ★ ★

வடபகுதிப் பொலிஸ் அதிபராக திரு. ஆர். சுந்தரலிங்கம் கடமையாற்றிய காலம்: பொலிஸ் வேலைக்கு ஆட்களைத் தெரிவு செய்யும் நேர்முகப் பரீட்சை நடந்தது. எனக்குத் தெரிந்த ஒரு இளைஞனும் நேர்முகப் பரீட்சைக்குப் போயிருந்தார். வாட்டசாட்டமான தோற்றம்.

சில வருடங்களுக்கு முன்னர் காங்கேசன்துறை வீதியில் இரண்டு மினிபஸ்கள் ஓட்டப்போட்டியிலீடுபட்ட போது நாச்சிமார் கோவிலுக்கு அருகேயுள்ள கடை மீது ஒரு மினிபஸ் பாய்ந்ததில் கடைக்காரர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டார். இத்துயரச் செய்தியைக் கேள்விப் பட்டதுமே அவரது மனைவி தற்கொலை செய்து கொண்டார்.

கணவனும் மனைவியும் ஒரே நேரத்தில் சிதையில் வைத்துத் தகனம் செய்யப்பட்டதைக் கண்டு கண்ணீர் விட்டோர் பலர். அந்தக் குடும்பத்தின் குழந்தைகள் இன்றும் கண்ணீர் விடுகின்றன.

இந்தச் சோக நிகழ்ச்சிக்குப் பின்னரும்கூட யாழ்ப்பாணத்தில் காங்கேசன்துறை வீதியில் மினிபஸ்களின் ஓட்டப்போட்டி குறைந்து விடவில்லை.

யாழ்ப்பாணத்தில் மினிபஸ்காரர் தமக்கென ஒரு சாம்ராஜ்யமே நடத்துவதாகத்தான் சொல்லவேண்டும்.

பஸ்நிலையத்தில் பொது மக்களைப் பற்றியோ, மற்றும் வாகனங்களைப் பற்றியோ மினிபஸ்காரர் கவலைப்படுவதில்லை. குறுக்கும் நெடுக்குமாக வாகனங்களைக் கொண்டு வந்து நிறுத்துவார்கள். வேகமாக வாகனங்களைக் கொண்டு வந்து திருப்புவார்கள். நடைபாதை மீதும் வாகனங்கள் செல்லும்!

பிரயாணிகளை ''அக்கா, அண்ணை, ஐயா'' என்று ஆதரவாக அழைத்து வாகனத்துள் ஏற்றியபின் ''பின்னுக்குத் தள்ளிப்போ, தள்ளினில், நிற்கமுடியா விட்டால் கீழே இறங்கு'' என்று மரியாதையாதைக் குறைவாக அவர்களுக்கே உரிய பாஷையில் பேசுவது சாதாரணம்.

புளிமூட்டைகள் அடுக்குவதுபோல் மினிபஸ்களில் பிரயாணிகளை அளவுக்கு அதிகமாக ஏற்றுவதும்; பிரயாணிகள் மிதிபலகைகளில் தொங்கிக்கொண்டு பயணம் செய்வதும் அன்றாடம் காணும் காட்சிகள்.

போக்குவரத்துச்சபை பஸ்களை முந்திச் செல்ல வேண்டுமென்பதற்காக அதிவேகமாக வீதிகளில் வாகனங்களை ஓட்டிச் செல்லும்போது வீதியில் வருபவர்களைப் பற்றியோ, வாகனத்தினுள்ளிருக்கும் பிரயாணிகளைப் பற்றியோ சிறிதும் கவலைப்படுவதில்லை.

வீதிப்போக்குவரத்து ஒழுங்கு விதிகள் மினிபஸ்காரர் தெரிந்து கொள்வதில்லை. தெரிந்தாலும் அதைப் பற்றிய கவலையுமில்லை.

வடபிரதேச போக்குவரத்துச்சபை கூடுதலான பஸ்களை சேவைக்கு விடுவதன் மூலம் மினிபஸ் தொல்லைகளைக் குறைக்கலாம்.

மினிபஸ்களுக்குப் பஸ்நிலையத்துக்குச் சமீபமாக ராணித் தியேட்டருக்குப் பின்புறமுள்ள காணியில் தனியாக நிலையம் அமைப்பதன் மூலம் பஸ்நிலையத்தில் இட நெருக்கடியைக் குறைக்கலாம்.

வீதிப்போக்குவரத்து ஒழுங்குகளைக் கவனித்து நடக்காத மினிபஸ் சாரதிகள் மீது நடவடிக்கை எடுப்பதற்கும் ஆவன செய்யப்பட வேண்டும்.

தாமாகவே திருந்திக் கொள்ளாதவர்களைத் திருத்தி நடக்கச் செய்யவேண்டியதும் அவசியமாகும்.

தொடர்பாக ஒரே மாதிரியான கருத்தைக் கொண்டிருந்தார்கள் என்று சொல்வதற்கில்லை. முதலில் இந்திய இராணுவத்தின் வெளியேற்றத்துடன் பெருமளவிலான ஒரு இரத்தக்களரி ஏற்பட இடமில்லை. விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்துக்கும் இடையில் சமாதானம் நிலவாது போனால் 'ஆயுதந்தரித்த ஒரு சமாதானச் சகவாழ்வு' நிலை நாட்டில் ஏற்படலாம் என்று ஒரு அமைச்சர் என்னிடம் கூறினார். இரண்டாவது ஜே. வி. பி. போராளிகள் அரசியலில் ஒரு ஸ்திர நிலையை அடையப் பல வருடங்கள் பிடிக்கலாம். அதற்கிடையில் பாராதினப்பட்டுள்ள இளைஞர்களை வசப்படுத்துவதற்கான ஒரு திட்டத்தை வகுத்து, அதைச் செயற்படுத்துவதற்கான நேர காலம் அரசாங்கத்துக்குக் கிடைக்கும். மூன்றாவது, அரசாங்கம் அரசியலில் தலையிடாது இப் பின்னணியில் இலங்கையின் ஜனநாயகத்துக்கு ஆபத்து ஏற்படாது.

உதவி வழங்கும் நாடுகள் கொடுத்த 87 லட்சம் ஸ்ரேலிங் பண உதவி காலம் அறிந்து செய்த பெரும் உதவியாகும். திறந்த பொருளாதாரக் கொள்கையானது நாட்டின் பொருளாதார வளர்ச்சி விகிதத்தை அதிகரிக்கும் என்ற யு. என். பி யின் நம்பிக்கை தவறானதாகும். திறந்தபொருளாதாரக் கொள்கை 1986இல் அதன் ஆரம்பத்தில் நம்பிக்கையூட்டுவதாக அமைந்தது. இவ்வாண்டில் நாட்டின் பொருளாதாரம் பொதுவாக 4.5% வளர்ந்தது. யு. என். பி 1983 இல் ஆட்சிக்கு வந்த காலத்திலும் இதே நிலை (4.3%) தான். 1987 இலும், 1988 இலும் நாட்டின் பொருளாதாரமுன்னேற்றம் முடங்கி முறையே வளர்ச்சி 1987 இல் 1.6% இலும், 1988 இல் 2 5% இலும் காணப்பட்டது.

நாட்டில் பணவீக்க விகிதம் 1988 ஆம் ஆண்டில் இருந்து 18 - 22% க்குமிடையில் உள்ளது என்பதைக் கவனத்தில் கொண்டால் இலங்கை எதிர் மறையான வளர்ச்சியில் சிக்கிக்கொண்டிருப்பது தெரிகிறது.

ஏற்றுமதி வர்த்தகத்திலிருந்து கிடைக்கும் வருமானத்தில் கால் பங்கு வெளிநாட்டுக் கடன்களை அடைப்பதற்குக் கொடுக்கப் படுகிறது. உலகவங்கி, சர்வதேச நாணய நிதி ஆகிய நிறுவனங்களின் ஆலோசனையைப் பெற்று அரசாங்கம் உணவுக்கும் கல்விக்கும் வழங்கிய மான்யத்தைக் குறைத்து விட்டது. (1980 இல் தேசிய மொத்த உற்பத்தியில் 0.5% தான் உணவு மான்யமாக ஒதுக்கப் பட்டது. 1973 உணவு மான்யம் 4.5%)

இதற்கெதிராக எம்மால் ஒன்றும் செய்யமுடியாது.

ஸ்தாபன ரீதியான நெருக்கடி பாராளுமன்றத்தில் மிக

## பவானி சென்குந்தா

நாம் உயிரோடு வாழ்வதற்குக் கொடுத்து வைத்தவர்கள்'' ஒரு இளம் பத்திரிகையாளர் என்னிடம் பிரஸ்தாபித்தார். எப்படியும் சர்வதேச மனித உரிமைகள் நிறுவனம் இந் நிகழ்வுகள் பற்றிக் கவனம் எடுக்கத் தொடங்கியது. இலங்கையில் இடம் பெறும் கொலைகளுக்கு எதிரான முதற் கண்டனம் சர்வதேச மன்னிப்புச் சபையிடமிருந்து கிளம்பியது. வெளியுறவு அமைச்சர் ரஞ்சன் விஜெயரட்ணா கோபத்தின் அதீதமான விளைவினால் சர்வதேச மன்னிப்புச் சபை 'பயங்கர வாதிகளின் நிறுவனம்' ன்றும், இலங்கையின் உள் விவகாரங்களில் அது தலையிடக் கூடாது என்றும் கண்டித்தார். இதற்காக இவர் விரைவில் கவலைப்பட நேரிடும் தொழில் அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கா சர்வதேச மன்னிப்புச் சபை ஜே. வி. பிக்கு நிதி உதவி வழங்கி வருவதாக குற்றஞ் சாட்டினார். பிரேமதாசாவின் மந்திரி சபையில் காத்திரமானவர்களான இந்த இரு அமைச்சர்களும் முக்கியமானதொரு சர்வவேச மாற்றத்தை அவதானிக்கத்தவறிவிட்டார்கள். பரம்பரையாக இலங்கைக்கு கடனுதவி வாங்கி வந்த நாடுகள் இங்கிலாந்தும், பிரான்சுமாகும். ஆனால் தற்சமயம் ஸ்கண்டினேவிய நாடுகளும், மே. ஜேர்மனியும் தான் இலங்கைக்கு அதிகளவு நிதி உதவி வழங்கி வந்தன.

சொற்ப ஆசனங்களை கட்சிகளைப் பலவீனத்தின் எல்லைக்கோட்டிற்கு தள்ளியுள்ளன. ஜனநாயக நீரோட்டத்தில் இணைய விரும்பும் ஜே. வி. பியினரையும் அவர்களது ஆதரவாளர்களையும் இணைந்து, நாட்டிலுள்ள அரசியல் சக்திகளுக்கும் தனக்கிடையில் ஒரு தொடர்பை ஏற்படுத்த பிரேமதாசா விரும்புகிறார். விடுதலைப் புலிகள் தமது ஈழக் கோரிக்கையை கைவிடும் பட்சத்தில் அவர்களையும் சேர்த்துக் கொள்ள விரும்புகிறார்.

### இந்தியத் தொடர்பு

இந்தியாவோடான தமது உறவுகளில் தமிழ் நாட்டின் குணகம் பற்றி இலங்கை மக்கள் அளவுக்கதிகமான அக்கறை கொண்டுள்ளார்கள். இந்தியாவின் உள்நாட்டு அரசியல் மாற்றங்கள் அத்துடன் இந்தியாவின் வடக்கிலும் தெற்கிலும் அரசியல் சமநிலையில் ஏற்பட்டுவரும் மாற்றங்கள் பற்றி இலங்கை மக்களின் அறியாமை ஆச்சரியப்படத்தக்கது. யாழ். பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி ஒரு அரிதான தமிழ் அறிஞர் இவர் பாதிப்புக்குள்ளான தமிழர்களின் மனோ நிலையை சிங்களவருக்கு விளக்க முயற்சித்து வருகிறார். அரசியல் மட்டத்தில் அல்லாது மக்கள் மட்டத்தில் விரிவான அடிப்படையில் ஸ்ரீலங்காவும் தமிழ் நாடும் தொடர்புகளை

கையான எதிர்காலம் உடையவருமான தோட்டத் தொழில்த்துறை அமைச்சர் காமினிதிஸாநாயக்க எமக்குக் கூறியகூடன், தான் இந்திய வர்த்தக அமைச்சர் அருண் நேருவுடன் ஒரு சந்திப்புத் தொடர்பாகப் பதிலை எதிர் பார்த்திருப்பதாகவும் தெரிவித்தார். ''நாம் இணைந்து செயற்படுவதன் மூலம் எமது நாடுகளில் தேயிலைக்கு போட்டியை ஏற்படுத்தவும், உத்வேகத்தை அளிக்கவும் விரும்புகிறோம்'' என்றார் காமினி. இந்தியாவுடன் சண்டை போடாமல் ஒன்றிணைந்து செயற்படும்படி 1987 முதல் பலம்படைத்த முக்கியமான அரசுகள் - சோவியத் ரஸ்யா, ஐக்கிய அமெரிக்கா, இங்லாந்து, சீனா, ஆகியன இலங்கைக்குச்சொல்லி வருவதால் தான் இலங்கை இந்தியாவின் பக்கம் திரும்பத் தயாராகவுள்ளது. கெடுபிடி யுத்தத்தின் விளைவாக உலகத்தின் பார்வையில் இலங்கையின் முக்கியத்துவம் குறைந்து காணப்படுகிறது. அமெரிக்கர்களுக்கு இப்பொழுது திருகோணமலையில் அக்கறையில்லை. 1987 கோடை காலத்தில் திருகோணமலை எண்ணெய்க் கொள்கலன்கள் விவகாரத்தை இந்தியா ஒரு பிரச்சினையாக்கியதும் அமெரிக்க எண்ணெய்க் கொள்கலன்களை புனரமைப்பதைக் கைவிட்டுள்ளது வொயிஸ் ஒப் அமெரிக்காவுக்கு கொழும்பில் கொடுக்கப்பட்ட வசதிகள் கவனிப்பாரற்ற நிலையில் உள்ளன. மூன்றாம் உலகநாடுகளுக்காக வழமையாகக்கெடுபிடி யுத்தத்தில் ஈடுபட்டிருந்த நாடுகள் தளங்களையும், வசதிகளையும் ஏற்படுத்துவதற்கான தமது விருப்பங்களை கைவிட்டுள்ளன.

இந்திய இராணுவம் விலகியதும் ஆயுதபாணிகளான விடுதலைப் புலிகள் திருகோணமலையையும், யாழ்ப்பாணத்தையும் தமது கட்டுப்பாட்டுள் கொண்டு வந்து விடுவார்கள். சமாதானத்தை ஏற்படுத்த தலையிட்ட இந்தியாவுக்கு இது தோல்வியைக்காட்டுகிறதா? ''ஆம்'' என்று பதிலளித்தாலும் இதுதான் இலங்கையைப் பற்றிய முழுமையான கதையும் அல்ல. ஸ்ரீலங்கா தொடர்பான இந்தியாவின் ராஜரீகத்தின் இலக்குகளில் விடுதலைப்புலிகளையும் கொழும்பையும் சேர்த்து வைப்பது தான். ''உங்களுடைய வெற்றியை உங்களுக்கு மதிப்பிடத் தெரியாது'' என்றார் ஓர் இலங்கையைச் சேர்ந்த ராஜ தந்திரி.

(தொடரும்)

## கட்டியெழுப்பி முன்னேறுவோம்

ஆசிரியர்

ஈழநாதம்,

இன்று யாழ்ப்பாண நகரம் ஒரு சுமூகமான நிலைக்கு வந்து விட்டது, ஆனாலும் சுற்று சூழல்கள் இன்னும் மாசு படிந்த வாறும் கட்டிடங்கள் ஒழுங்குபடுத்தப்படாமலும் காணப்படுகின்றன. போர் ஒன்றினை சந்தித்து விட்டு இருக்கும் மக்கள் இலகுவான நிலைக்கு வர தாமதம் எடுத்தாலும் காலம் போய்க் கொண்டே இருக்கிறது. இன்றைய ஜப்பானும், ஜேர்மனிப் இரண்டாம் உலகப் போருக்குப் பின்னரே இவ்வளவு தூரம் வளர்ச்சி அடைந்தன. குறிப்பாக ஜப்பானில் அமெரிக்க விமானங்கள் ஹீரோசிமா, நாகசாகி நகரங்களில் அணுகுண்டுகள் போடப்பட்டு அந்நகரங்கள் அழிக்கப்பட்டன. ஆனால் ஜப்பானிய மக்களின் ஒத்துழைப்பாலும் சடும் உழைப்பினாலும் ஆர்வத்தாலும் அந்நகரங்கள் மீள் அமைக்கப்பட்டதோடு ஜப்பானும் பெரும் முன்னேற்றம் அடைந்தது. ஆகவே யாழ்ப்பாணத்தில் இன்று பாதுகாப்பு நடவடிக்கைகள் போக்கு வரத்து வசதிகள் படக்காட்சி என்பன மீண்டும் ஏற்பட்டிருக்கும் இவ்வேளையில் மக்களும் ஒத்துழைத்து முன்பிருந்த நிலைக்கு யாழ் நகரை கொண்டு வர முயல வேண்டும் இக் கடிதத்தில் குறிப்பிட்ட விடயங்கள் பற்றி சகலரும் மிக கூடிய விரைவில் கவனம் எடுப்பார்கள் என நம்புகின்றேன்.

கௌரி- மு

யாழ்ப்பாணம்.

## மக்கள் மடல்

களைச் சேர்ந்த ஊழியர்கள பாடாய்ப்படுகிறார்கள் வீடமைப்புத்திணைக்களத்தைச் சேர்ந்த ஊழியர்களின் நிலைபற்றி நமது பத்திரிகையில் வெளிவந்திருந்தது. அதன் விளைவு அங்குள்ள ஊழியர் ஒருவருக்குத் திடீர் இடமாற்றம்!

★ ★ ★

வடபகுதிப் பொலிஸ் அதிபராக திரு. ஆர். சுந்தரலிங்கம் கடமையாற்றிய காலம்: பொலிஸ் வேலைக்கு ஆட்களைத் தெரிவு செய்யும் நேர்முகப் பரீட்சை நடந்தது. எனக்குத் தெரிந்த ஒரு இளைஞனும் நேர்முகப் பரீட்சைக்குப் போயிருந்தார். வாட்டசாட்டமான தோற்றம்.

நேர்முகப் பரீட்சையில் இவரைப்பற்றி விசாரித்தார்கள். பின்னர் கேள்விகள் கேட்கப்பட்டன.

''ஊவா மாகாணத்தின் தலைநகரம் எது?'' என்று பொலிஸ் அதிபர் சுந்தரலிங்கம் கேட்டார்.

''காலி'' என்று இளைஞன் பதிலளித்தான்.

பட்டென்று சுந்தரலிங்கத்திடமிருந்து பதில் வந்தது ''உமக்கும் வேலை காலி, போய்வாரும்'' என்று.

நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுபவர்கள் எதற்கும் பதில் சொல்லத் தயாராக இருக்கவேண்டும்.

மற்றோரிடத்தில் ஓர் இளைஞன் சமீபத்தில் நேர்முகப் பரீட்சைக்குச் சென்றான். தகப்பனாரின் வேலை என்ன வென்று கேட்கப்பட்டது. ''வங்கி முகாமையாளர்'' என்று பதில் சொன்னான். தாயாருக்கு என்ன வேலை? குசினித் திணைக்களம் என்று பதில் சொன்னான்.

இதென்னப்பா வீட்டில் சமையல் செய்வதை ஒரு திணைக்களமாக்கி விட்டாயே என்று கேட்டார்கள்.

குசினி வேலை என்றால் சிறிய விஷயமா, வீட்டுக்குத் தேவையான பொருள்களை வாங்கவேண்டும். சமையல் சுவையாகவும் போஷாக்குள்ளதாகவும் இருக்கவேண்டும், வீட்டின் வருமானத்துக்கு ஏற்ப செலவு செய்ய வேண்டும், சேமிக்கவும் வேண்டும், வீட்டை ஒழுங்காக நிர்வாகிக்கவும் வேண்டும்.

எத்தனை பெரிய பொறுப்பான பதவி! என்றான் இளைஞன்.

அவன் வேலைக்குத் தெரிவு செய்யப்பட்டான்.

ஈழநாதம்

# ஊழியர் அசிரத்தையால் நோயாளி மரணமானால்

## கடும் நடவடிக்கை எடுக்க சுகாதார அமைச்சர் உத்தரவு

(பருத்தித்துறை)

அரசாங்க வைத்தியசாலைகளில் டாக்டர்கள், தாதிமார்கள், சிற்றூழியர்கள் கவனயீனமாக நடந்து கொள்வதால் அண்மைக்காலங்களில் நோயாளர் மரணமாவது அதிகரித்து வருவது கவலைக்குரிய விடயமெனத் தெரிவித்துள்ள சுகாதாரபகளிர் விவகார அமைச்சர். திருமதி. ரேணுகா ஹெரத்ரணவீர ஊழியர்களின் கவனயீனத்தால் மரணமாவது தொடராது இருக்கக் கடும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்றும் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

அமைச்சரினால் சகல சுகாதார சேவைகள் பிரதேச பணிப்பாளர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன சுற்றுநிரூபத்திலேயே மேற்கண்ட உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

வைத்தியசாலைகளில் கடமையின்போது கவனயீனமாக இருக்கும் சுகாதாரப் பகுதி ஊழியர்கள் மீது உடனடியாக ஒழுங்கு நடவடிக்கை எடுக்கும்படியும் அமைச்சர் சுகாதார சேவைகள் பணிப்பாளர்களுக்கு உத்தரவிட்டுள்ளார்.

அண்மையில் வைத்தியசாலை ஒன்றில் இருசிறுவர்கள் மரணமானது, கர்ப்பிணிப் பெண் ஒருவர் வைத்தியசலையில் அனுமதிக்கமறுக்கப்பட்டு அவர் வீதியில் மர நிழலின் கீழ் பிரசவித்தது போன்றசம்பவங்கள் அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்தது. ஒரு வைத்தியசாலையில் மருந்து கொடுப்பவர் நோயாளிகளுடன் சீறிப்பாய்ந்தது, மற்றொரு வைத்தியசாலையில் நோயாளர்களுக்கு நம்பர் துண்டு வழங்கும் ஊழியர் மது போதையில் அட்டகாசம் புரிந்துதான் விரும்பியவாறு நடந்து கொண்டமை பற்றியும் அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதையடுத்தே அமைச்சர் கண்டிப்பான உத்தரவுகளைப் பிறப்பித்திருப்பதாக சுகாதார திணைக்கள உயரதிகாரியொருவர் தெரிவித்தார். (25)

## ராஜீவை நீக்க முற்படுவோருக்கு செயலாளர் எச்சரிக்கை

(சென்னை)

நடந்து முடிந்த சட்டசபைத் தேர்தலில் இந்திரா காங்கிரஸ் தோல்வியடைந்ததை தொடர்ந்து இது பற்றி விவாதிக்க கடந்த சனிக்கிழமை காங்கிரஸ்சின் செயற்குழு கூட்டம் ராஜீவ் தலைமையில் நடைபெற்றது. இக் கூட்டத்தில் கட்சித் தலைவர் ராஜீவ் காந்தியை நீக்க நடந்து வரும் முயற்சிகள் பற்றி விவாதிக்கப்பட்டது. இக் கூட்டத்தில் கலந்து கொண்ட பொதுச் செயலாளர் சி. எம். ராஜ் பேட்டி அளிக்கும் போது கூறியதாவது: ராஜீவை நீக்க நினைக்கும் காங்கிரஸ் காரர்களுக்கு எச்சரிக்கை விடப்பட்டிருப்பதாகவும் ராஜீவுக்கு எதிரான பொய்ப் பிரச்சாரங்களை காங்கிரஸ் அல்லாதவர்கள் தூண்டிவிட்டிருக்கிறார்கள் என்றும் கூறினார். அவர் மேலும் குறிப்பிடுகையில் இன்று இந்திரா காங்கிரஸ் இருக்கும் இக்கட்டான தருணத்தில் ராஜீவ் காந்தி மீது நம்பிக்கை வைத்திருப்பதாகவும், அவரது வழி காட்டலின் கீழ் மீண்டும் மக்கள் நம்பிக்கையை இக் கட்சி பெறுமென்றும் கூறினார்.

அத்துடன் தேர்தல் முடிவுகள் பற்றிய விபரம் இன்னும் முடியவில்லை என்றும் அவை அடிப்படையில் அடுத்த கூட்டத்தில் இவ் விவாதம் நடைபெறும் என்றும் கூறினார். மார்ச் 15, 16ஆம் திகதிகளில் அடுத்த செயற் குழுக் கூட்டம் நடைபெறும். இக் கூட்டம் நடைபெறுவதற்கிடையில் தேர்தல் பற்றிய சகல புள்ளி விபரங்களையும் சேகரிக்கும்படி பொதுச் செயலாளர்கள் கேட்கப்பட்டுள்ளார்கள்.

### எதிரிகளைச்......

(1ஆம் பக்கத் தொடர்ச்சி

அவர் தொடர்ந்து பேசுகையில், சகஜ நிலையை ஏற்படுத்துவதற்கான பணிகளில் காஷ்மீர் மக்களும் ஈடுபட வேண்டுமென்பதே பாரத அரசின் விருப்பம் என்று பிரத

## தனியார் தாதிகள் பயிற்சி நிலையங்களை மூடக் கோரிக்கை

(கொழும்பு)

தனியார் தாதிகள் பயிற்சி நிலையங்களை உடனடியாக மூடிவிடும்படி தாதிகள் ஆசிரியர் சங்கம் சுகாதார அமைச்சைக் கேட்டுள்ளது.

நாரஹேன்பிட்டியாவில் அபயாராமாவில் இடம்பெற்ற தாதிகள் ஆசிரியர் சங்கக் கூட்டத்திலேயே மேற்படி முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

தனியார் தாதிகள் பயிற்சி நிலையங்கள் சட்டத்துக்கமைய அமைந்தவையல்லவென்றும், இங்கு பயிற்சி பெறும் தாதிகளுக்குப் படிப்பறிவு காணாது என்றும் தாதிகள் ஆசிரியர் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

மேற்படி சங்கம் மேலும் தெரிவிப்பதாவது தாதிகளுக்கு நல்ல பயிற்சி வழங்கப்பட வேண்டும். ஒழுங்கமைந்த பயிற்சி நிறுவனங்களில் துறை சார்ந்த ஆசிரியர்களால் இவர்கள் பயிற்றப்பட வேண்டும்.

## 'சிக்கலை அதிகரிக்கும்'

- இ. தொ. கா.

(கொழும்பு)

இன்றைய நிலையில் ஈழ ஜனநாயக குடியரசு பிரகடனம் தேவையற்றது என்றும், இப் பிரகடனம் மேலும் சிக்கல்களை அதிகரிக்கும் என்றும் இ. தொ. காங்கிரஸ் பொதுச் செயலாளரும் போக்குவரத்து ராஜாங்க அமைச்சருமான எஸ். செல்லச்சாமி தெரிவித்தார்.

### மாத்தைய......

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் திரு. மகேந்திரராஜா (மாத்தயா) வும் குழுவினரும் ஜனாதிபதி பிரேமதாசா மற்றும் குழுவினரையும் முதல் தடவையாகச் சந்தித்துப் பேசியபின் அமைச்சர் ஹமீத் மட்டக்களப்புக்குச் சென்று திரு. மகேந்திரராஜா (மாத்தயா) வைச் சந்தித்துப் பேசியிருந்தார்.

இதன்பின் கொழும்பில் நேற்று அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தூதுக் குழுவையும் புளட் இயக்கத்தின் அரசியல் கட்சிப் பிரதிநிதிகளையும் சந்தித்துப் பேசியிருந்தார்.

ஜனாதிபதி பிரேமதாசாவை திரு. மகேந்திரராஜா (மாத்தயா) முதல் தடவை சந்தித்துப் பேசியபொழுதும் பின்னர் ஜனாப் ஹமீத் மட்டக்களப்பிற்குச் சென்று பேசிய பொழுதும் இருந்த பிரச்சனைகளை விட இப்பொழுது திருகோணமலையிலிருந்து வடக்குகிழக்கு மாகாண சபை முதலமைச்சர் வரதராஜப்பெருமாள் ''ஈழ ஜனநாயகக் குடியரசு பிரகடனத்துக்கு ஒரு வருட அவகாசம் கொடுத்து மாகாண சபையை அரசியல் நிர்ணய சபையாக மாற்றித் தீர்மானம் நிறைவேற்றியிருப்பது சிறிலங்கா அரசுக்குச் சிறிது சிக்கலை ஏற்படுத்தியிருக்கிறது என்று அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

இந்தநிலையில்தான் தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவரும் செயலாளரும் ஜனாதிபதி பிரேமதாசாவின் அழைப்பின் மீது இரண்டாவது தடவையா நேற்று மீண்டும் சந்தித்துப் பேசியிருக்கிறனர்

இப்பேச்சு வார்த்தைகளின் விபரம் எதுவும் வெளியிடப் படவில்லை.

### சுங்கப் பரி-----

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

## பொஸ்கோ மாணவி ஜப்பான் பயணம்

(அரியாலை)

சமீபத்தில் வெளியிடப்பட்ட ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரீட்சை முடிவுகளில் அகில இலங்கையிலேயே மூன்றாவது இடத்தைப் பெற்ற யாழ்ப்பாணம் சென். ஜோன் பொஸ்கோ மாணவி செல்வி அபிராமி கனகரட்ணம் அரசாங்கம் ஒழுங்கு செய்துள்ள ஓர் கல்விச்சுற்றுலாவில் பங்கு பற்றி ஜப்பான் செல்வதற்கு அழைக்கப்பட்டுள்ளார் இவர் யாழ் பல்கலைக்கழகத்தில் கடமை புரியும் திரு, க. கனகரட்ணத்தின் சிரேஷ்ட புதல்வியாவார் ஜப்பான் செல்லும் இவரது பயண ஒழுங்குகளை பொஸ்கோ வித்தியாலய அதிபர் சங். சகோதரி ஜெறோம் மேற்கொண்டுள்ளார்.



## பீகாரில் ஜனதாதளம் ஆட்சி

(பட்னா)

பட்னாவில் நடந்து முடிந்த சட்டசபைத் தேர்தலில் எக்கட்சியும் பெரும்பான்மை பலம் பெறத்தவறிவிட்டன. ஆனால் ஜனதாதளமும் 120 ஆசனங்களில் பெற்று கூடுதல் ஆசனங்களைப் பெற்ற கட்சியாக உள்ளது. இக் ட்சிக்கு அதன் தோழமைக்கட்சிகளான மாக்சிஸ்ட் கம்மியூனிஸ்ட் கட்சிவலதுசாரிக்கம்மியூ கட்சி என்பனகூட்டாக ஆட்சி அமைக்க உதவவுள்ளன. அத்தோடு மாநிலத்தில் உள்ள வட்டாரக் கட்சிகளின் உதவி பெற்றுக்கொள்ள முயற்ச்சி நடக்கின்றது. அதே வேளை ஜனதாதளத்திற் குள்ளேயே பிரதமருக்சான போட்டிகள் இடம்பெறுகின்றது. பிரதமர் ஆதரவாளருக்கும் துணைப் பிரதமர் தேவிலால் ஆதரவாளருக்கும் போட்டி நிலவுகின்றது.

### புலிகள்.....

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

## நாங்கள் ஆயுதம் பெற்றது விவாதத்திற்குரியது

நாங்கள் கட்சியாக மாறியமைபாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டமை இலங்கையிடமும் இந்தியாவிடமும் ஆயுதம் பெற்றமை ஆகிய விடயங்கள் யாவும் பின்னர் விவாதத்திற்குரியனவாகி விட்டன. விடுதலைப் புலிகளுக்கும் இந்தியாவிற்கும் இடையில் ஏற்பட்ட மோதல் என்பனவற்றைத் தவறாகப் புரிந்து கொண்டமையால் எமக்கு அது பாதகமாக அமைந்து விட்டது என்றும் தெரிவித்தார்.

## பிரச்சினை தீரும்வரை ஆயுதம் கையளிக்கக்கூடாது

வடக்கு கிழக்கு மாகாண சபை பற்றிக் குறிப்பிடுகையில் மகாணசபை கலைக்கப்பட்டு புதிதாகத் தேர்தல் நடத்தப்பட வேண்டும் எனவும் குறிப்பிட்டார் இனி மேல் தமிழ் மக்களின் சிக்கல்கள் தீரும்வரை போராட்டத்தின் குறியீடாக உள்ள ஆயுதங்கள் கையளிக்கப்படக் கூடாது எனவும் தெரிவித்தார்.

## ஈழம் ஜனநாயகக் குடியரசுப் பிரகடனம் கேலிக்குரியது

வரதராஜப் பெருமாளின் அடிப்படைக் கோரிக்

ரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

வைத்தியசாலைகளில் கடமையின்போது கவனயீனமாக இருக்கும் சுகாதாரப் பகுதி ஊழியர்கள் மீது உடனடியாக ஒழுங்கு நடவடிக்கை எடுக்கும்படியும் அமைச்சர் சுகாதார சேவைகள் பணிப்பாளர்களுக்கு உத்தரவிட்டுள்ளார்.

அண்மையில் வைத்திய சாலையொன்றில் இருசிறுவர்கள் மரணமானது, கர்ப்பிணிப் பெண் ஒருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கமறுக்கப்பட்டு

### எதிரிகளைச்......

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவர் தொடர்ந்து பேசுகையில், சகஜ நிலையை ஏற்படுத்துவதற்கான பணிகளில் காஷ்மீர் மக்களும் ஈடுபட வேண்டுமென்பதே பாரத அரசின் விருப்பம் என்று பிரதமர் கூறினார்.

### தமிழ்க் காங்-.-...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பொழுது இதர குழுக்களுடனும் அரசியல் கட்சிகளுடனும் பேச்சுவார்த்தை நடத்தி வருவதும் குறிப்பிடத்தக்கது.

இலங்கையின் முன்னைநாள் வெளிவிவகார அமைச்சரான அமைச்சர் ஹமீத் ராஜதந்திர வட்டாரங்களின் நன்மதிப்பைப் பெற்றவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## 1954 பின் பிறந்தோர் சான்றிதழ் இல்லை

(யாழ்ப்பாணம்)

யாழ். கச்சேரியில் 1954ம் ஆண்டிற்கு முன்னர் பிறந்தவர்களுக்குரிய பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் வழங்கும் படிவங்கள் மட்டுமே உள்ளதாகத் தெரிய வருகின்றது. 1954ம் ஆண்டிற்குப்பின் பிறந்தவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கும் பத்திரங்கள் கையிருப்பில் இல்லாததால் அவர்களுக்குரிய சான்றிதழ்கள் பெறமுடியாது உள்ளது.

## புளொட் சந்திப்பு

உயர்கல்வி விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சரும், வடக்கு கிழக்கு சமாதானக் குழுவின் தலைவருமான சாகுல்கமீத் சனிக்கிழமை தமது அமைச்சில் புளொட் அமைப்பின்ஜனநாயக மக்கள் முன்னணி தூதுக்குழுவைச் சந்தித்தார். ஜனநாயக மக்கள் முன்னணியின் தூதுக்குழுவின் தலைவராக புருசோத்தமன் பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டார். இவருடன் மேலும் மூவர் பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டனர்.

(சென்னை)

நடந்து முடிந்த சட்டசபைத் தேர்தலில் இந்திரா காங்கிரஸ் தோல்வியடைந்ததை தொடர்ந்து இது பற்றி விவாதிக்க கடந்த சனிக்கிழமைகாங்கிரஸ்சின்செயற்குழு கூட்டம் ராஜீவ் தலைமையில் நடை பெற்றது. இக் கூட்டத்தில் கட்சித் தலைவர் ராஜீவ் காந்தியை நீக்க நடந்து வரும் முயற்சிகள் பற்றி விவாதிக்கப் பட்டது. இக் கூட்டத்தில் கலந்து கொண்ட பொதுச் செயலாளர் சி. எம். ராஜ் பேட்டி அளிக்கும் போது கூறியதாவது: ராஜீவை நீக்க நினைக்கும் காங்கிரஸ் காரர்களுக்கு எச்சரிக்கை விடப்பட்டிருப்பதாகவும் ராஜீவுக்கு எதிரான பொய்ப் பிரச்சாரங்களை காங்கிரஸ் அல்லாதவர்கள் தூண்டிவிட்டிருக்கிறார்கள் என்றும் கூறினார். அவர் மேலும் குறிப்பிடுகையில் இன்று இந்திரா காங்கிரஸ் இருக்கும் இக்கட்டான தருணத்தில் ராஜீவ் காந்தி மீது நம்பிக்கை வைத்திருப்பதாகவும், அவரது வழி காட்டலின் கீழ் மீண்டும் மக்கள் நம்பிக்கையை இக் கட்சி பெறுமென்றும் கூறினார்.

அத்துடன் தேர்தல் முடிவுகள் பற்றிய விபரம் இன்னும் முடியவில்லை என்றும் அவை அடிப்படையில் அடுத்த கூட்டத்தில் இவ் விவாதம் நடைபெறும் என்றும் கூறினார். மார்ச் 15, 16ஆம் திகதிகளில் அடுத்த செயற் குழுக் கூட்டம் நடைபெறும். இக் கூட்டம் நடைபெறுவதற்கிடையில் தேர்தல் பற்றிய சகல புள்ளி விபரங்களையும் சேகரிக்கும் படி பொதுச் செயலாளர்கள் கேட்கப்பட்டுள்ளார்கள்.

னரும்ஜனாதிபதி பிரேமதாசா மற்றும் குழுவினரையும் முதல் தடவையாகச் சந்தித்துப் பேசியபின் அமைச்சர் ஹமீத் மட்டக்களப்புக்குச் சென்று திரு. மகேந்திரராஜா (மாத்தயா) வைச் சந்தித்துப் பேசியிருந்தார்.

இதன்பின் கொழும்பில் நேற்று அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தூதுக் குழுவையும் புளட் இயக்கத்தின் அரசியல் கட்சிப் பிரதிநிதிகளையும் சந்தித்துப் பேசியிருந்தார்.

ஜனாதிபதிபிரேமதாசாவை திரு. மகேந்திரராஜா (மாத்தயா) முதல் தடவை சந்தித்துப் பேசியபொழுதும் பின்னர் ஜனாப் ஹமீத் மட்டக்களப் பிற்குச் சென்று பேசியபொழு யாக மாற்றித் தீர்மானம் நிறைவேற்றியிருப்பது சிறிலங்கா அரசுக்குச் சிறிது சிக்கலை ஏற்படுத்தியிருக்கிறது என்று அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

இந்தநிலையில்தான் தமிழிழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவரும் செயலாளரும் ஜனாதிபதி பிரேமதாசாவின் அழைப்பின் மீது இரண்டாவது தடவையா நேற்று மீண்டும் சந்தித்துப் பேசியிருக்கிறனர்

இப்பேச்சு வார்த்தைகளின் விபரம் எதுவும் வெளியிடப் படவில்லை.

### ஆறு லட்சம் ..-.

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

மேற்படி முன்னணியின் செயலாளர் திரு. யோகரட்ணம் (யோகி) அவர்கள் கல்லூரியை ஆரம்பித்து வைப்பார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் இக்கல்லூரி ஆறுலட்சம் ரூபா செலவில் மிகப் பிரமாண்டமாகக் கட்டி முடிக்கப்பட்டுள்ளது

வன்னிப் பிராந்திய விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணிப் பொறுப்பாளர் ஆர். சந்திரன் கிளிநொச்சிமாவட்ட விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணி பொறுப்பாளர் கோபி ஆகியோர் மங்களவிளக்கேற்றுவார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

விடுதலைப்புலிகளின் மக்கள் முன்னணியின் கலை-கலாசார பிரிவுப் பொறுப்பாளர் திரு. புதுவை இரத்தினதுரை மேற்படி கல்லூரியை கிளிநொச்சி மாவட்ட மக்களுக்கு அர்ப்பணித்து வைப்பார். (தி)

### ஆமர் வீதி---:-

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பாதுகாப்புப் படையினர், சந்தேக நபர் ஒருவர் கொடுத்த தகவலைத் தொடர்ந்து, கொழும்பு ஆமர் வீதியில் வீடொன்றில், 40கிலோ எடையுள்ள லேகிய மருந்தைக் கைப்பற்றியுள்ளனர் என அரசாங்க அறிக்கை ஒன்று கூறுகிறது.

### யாழ். குடாநாடு......

(1ஆம் பக்க தொடர்ச்சி)

என்றும் அவ்வதிகாரி தெரிவித்தார். மேலும் பெருந்தெருக்கள் திணைக்களம் ஆரம்பிக்கப்பட்டபின் இத்தகைய அதிகாரிகள் வருவது இதுவே முதல் தடவை என்றும் அவர் தெரிவித்தார்.

# மஞ்சாடிக்கு இடமில்லை

## மற்றும் படிகளும் பரிசோதனையில்

(யாழ்ப்பாணம்)

நகைக் கடைக்காரர்கள் 8 கிராம் படி, அல்லது 800 மில்லி கிராம் படிக் கற்களை உபயோகிக்க வேண்டும். மஞ்சாடி போன்ற அளவைகளைப் பயன்படுத்தக் கூடாது என்று யாழ். நிறுவை அளவைப் பகுதிப் பொறுப்பதிகாரி கா. நாகலிங்கம் தெரிவித்தார்.

நகைக் கடைக்காரர்கள் அனைவரும் உயர் செம்மை-வகுப்பு-2 என்ற ஒரு மில்லி கிராம் வித்தியாசத்தைக் கூட காட்டக்கூடிய தராசை உபயோகிக்க வேண்டும் என்றும் மேற்படி கடைக்காரர்களின் தராசுகளை பரிசோதிப்பதற்கான தராசு கொழும்பிலிருந்து கொண்டுவரப்பட்டவுடன் நகைக் கடைகளில் உள்ள தராசுகள் யாவும் பரிசோதித்து சீல் வைக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இன்னும் ஓரிரு வாரங்களில் யாழ். மாநகரசபை நிர்வாகத்திற்குட்பட்ட பகுதிகளில் இருக்கும் எரிபொருள் நிலையங்கள் யாவும் பரிசோதனை செய்து சீல் வைக்கப்படும் என்றும். சின்னக்கடை பெரிய கடைப் பகுதிகளைச் சேர்ந்த வியாபாரிகள் தத்தமது தராசு படிக்கற்களை இன்று ஆறாம் திகதியும், நாளை ஏழாந் திகதியும் சீல் வைப்பதற்காக, யாழ். செயலகத்தில் இருக்கும் நிறுவை - அளவை பகுதிக்கு கொண்டுவர வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார். (தி)

## சஞ்சிகை வெளியீடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் புவியியலாளன் சஞ்சிகையின் வெளியீட்டு விழா நாளை மாலை 3-30 மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது. இவ்வெளியீட்டு விழாவின் ஆரம்ப உரையை பேராசிரியர் ஏ. துரைராஜாவும், அறிமுகவுரையை பேராசிரியர் பொ. பாலசுந்தரம் பிள்ளையும் நிகழ்த்தவுள்ளனர்.

## பயிற்சி ஆசிரியர் நியமனம்

(கொழும்பு)

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இருந்து 4000பயிற்சி ஆசிரியர்களில் முதற் தொகுதியினருக்கு 800 பேருக்கு நாளை திருமலையில் நியமனம் வழங்கப்படும். கல்விச் சேவைகள் கமிட்டித் தலைவர் திரு. கோரிக்மெண்டிசுக்கும் வடக்குக் கிழக்கு மாகாணப் பணிப்பாளர்களுக்குமிடையில் நடைபெற்ற கூட்டத்தில் இத் தீர்மானம் எடுக்கப்பட்டது. அதேவேளை அம்பாறை மாவட்டத்தில் ஏற்கனவே 1000 சிங்கள பயிற்சி ஆசிரியர்கள் நியமனம் பெற்று விட்டார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

### சுங்கப் பரி-----

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

லைக்குள் நிலை கொண்டிருந்த ஸ்ரீலங்கா பாதுகாப்புப் படையை மீள அழைக்குமாறு பிரேமதாஸாவிடம் கூறும்படி தான் ஆளுநரைக் கேட்டதாகத் தெரிவித்துள்ளார்.

தனது கோரிக்கைகளுக்கு அரசாங்கம் செவிசாய்க்காவிட்டால், தமிழீழத்தின் நாட்டான்மையையும், ஒருமைப் பாட்டையும் நிலைநாட்டுவதற்கு, இப்பேற்பட்ட சூழ் நிலையில் மற்ற அரசுகள் மேற்கொள்ள வேண்டிவரும் நடவடிக்கையையே தானும் மேற்கொள்ள வேண்டி வரும் என்றார்.

இந்திய இராணுவத்தின் வெளியேற்றத்துடன் சேர்ந்தாற்போல் பலர் தாமும் இந்தியாவுக்குப் போகிறார்கள் என்ற கேள்விக்குப் பதிலளிக்கையில், அதுபற்றி எனக்கு ஒன்றும் தெரியாது என்று முதலில் பதிலளித்த வரதர், இந்தியாவுக்கு அகதிகளாகச் சென்ற பலர், இந்திய இராணுவத்தின் இலங்கைப் பிரவேசத்துடன், சாந்தியும் சமாதானமும் இங்கு வந்துவட்டதாக நினைத்து தமது பிரதேசங்களுக்குத் திரும்பினார்கள் என்றும், சமாதானம், சாத்தியப் படாததால் மறுபடியும் இந்தியா போகிறார்கள் என்றும், அவர்களுக்கு அடைக்கலம் வழங்குவது இந்தியாவின் கடமை என்றார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், ஈழப் பிரகடனத்துக்குப் பிறகும் ஈ. பி. ஆர். எல். எவ். பாராளுமன்ற அங்கத்தவர் பாராளுமன்றத்தில் இருப்பார்கள் என்றார்.

ஒரு பிரதேச இராணுவத்தை ஏற்படுத்துவாரா என்ற கேள்விக்குப் பதிலளிக்கையில், ஒரு வருடம் கழிந்த பிறகு பிரதேச பாதுகாப்புப் படை ஒன்று நிறுவப்படும் என்று சன் பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

லில் போட்டியிட்டமை இலங்கையிடமும் இந்தியாவிடமும் ஆயுதம் பெற்றமை ஆகிய விடயங்கள் யாவும் பின்னர் விவாதத்திற்குரியனவாகி விட்

பனவற்றைத் தவறாகப் புரிந்து கொண்டமையால் எமக்கு அது பாதகமாக அமைந்து விட்டது என்றும் தெரிவித்தார்.

## பிரச்சினை தீரும்வரை ஆயுதம் கையளிக்கக்கூடாது

வடக்கு கிழக்கு மாகாண சபை பற்றிக் குறிப்பிடுகையில் மகாணசபை கலைக்கப்பட்டு புதிதாகத் தேர்தல் நடத்தப்பட வேண்டும் எனவும் குறிப்பிட்டார் இனி மேல் தமிழ் மக்களின் சிக்கல்கள் தீரும்வரை போராட்டத்தின் குறியீடாக உள்ள ஆயுதங்கள் கையளிக்கப்படக் கூடாது எனவும் தெரிவித்தார்.

## ஈழம் ஜனநாயகக் குடியரசுப் பிரகடனம் கேலிக்குரியது

வரதராஜப் பெருமாளின் தற்போதைய ஈழம் ஜனநாயகக் குடியரசுப்பிரகடனம் பற்றிக் கேட்டபோது இது மகக்ளின் அடிப்படைக் கோரிக்கையை வெறுமனே அரசியல் லாபத்திற்குப் பயன்படுத்தும் ஓர் கேவலமான செயல் எனத் தெரிவித்தார்.

## பேச்சு வார்த்தையை வரவேற்கிறோம் ஆதரிக்கிறோம்

தற்பொழுது விடுதலைப் புலிகளுக்கும் இலங்கைக்கும் இடையில் நடைபெறும் பேச்சு வார்த்தை பற்றிக் குறிப்பிடுகையில் அதை நாங்கள் வரவேற்கிறோம், அங்கீகரிக்கிறோம் எனவும் தெரிவித்தார். மேலும் அதுபற்றிக் குறிப்பிடுகையில் முன்னர் பேச்சு வார்த்தை நடாத்திய தலைவர் வேறுவழியின்றி அதை நடாத்தினர். தற்பொழுது பல வழிகளில் இது ஒரு வழியாக உள்ளது. எனவும் குறிப்பிட்டார். அத்தோடுஇலங்கை அரசாங்கத்திற்கும் ஓர் இறுதிச் சந்தர்ப்பம் வழங்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

எங்கள் பாராளுமன்ற உறுப்பினர்கள் தொடர்ந்து பராளுமன்றம் செல்லவுள்ளார்கள். பாராளுமன்றத்தில் சாதிப்பதற்கு ஒன்றுமில்லை ஆனால் ஆசனங்களை ராஜினாமாச் செய்வதிலும் நன்மையில்லைஎன்றும் குறிப்பிட்டார்,

மேலும் விடுதலைப் புலிகளுடன் பேசி எமது அரசியல் நிலைப்பாடுபற்றிப் பேசவுள்ளோம். அதற்காக உத்தியோகபூர்வமாக கடிதம் ஒன்று விடுதலைப் புலிகளின் தலைவருக்கு கொடுத்துள்ளோம். அதற்குரிய பதிலை எதிர் பார்த்துள்ளோம் என்றும் குறிப்பிட்டார்.

## மரண அறிவித்தல்

கொக்குவில் செம்பியன் லேனைச் சேர்ந்த திருமதி விஜயலக்சுமி (பிள்ளை) கைலநாதன் அவர்கள் 05-03-1990-ந் திகதி காலமானார். இவர் கைலநாதன் (பிரகாஷ் ரான்ஸ்போட் சேர்விஸ்) அவர்களின் அன்பு மனைவியும், கோபிதாவின் அன்புத்தாயாரும், காலஞ் சென்ற பத்மநாதன், பேரம்மா அவர்களின் அன்பு மகளும் S. P. S. ரான்ஸ்போட் சேர்விஸ் உரிமையாளர்களின் அன்புச் சகோதரியுமாவார். அன்னாரின் ஈமக் கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

44, செம்பியன் லேன்,
கொக்குவில்.

தகவல்:
குடும்பத்தவர்கள்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி, 31-ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1990 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 06-ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப் பெற்றது.